தனவைசியன்

V3. No. 8 20 Feb 1930

3L
Ṁ211, N20 KW
N30.3.8.
189092

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ஞு பிப்ரவரி மீ 20உ [No. 8.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 141
2. அப்பர் (குழலின் வகை) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 143
3. மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A., B.L. 145
4. நம்மாழ்வார் வைபவம் (முதல்பத்து) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 147
5. அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திரஉண்மை E. N. பத்மாவதி அம்மாள் B. A. 149
6. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன்தூது) 150
7. இலஞ்சிப் பாவை (இராதாகிருஷ்ணன் வருகை) T. S. நடராஜபிள்ளை. B. A., B. L 152
8. கம்பராமாயணம் (மந்திரப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. 154
9. ஆச்சரிய சூடாமணி (பர்ணசாலை அங்கம்) R. முத்தையர் 155
10. வர்த்தமானம் 159

கலா நிலயம்

சுயநலச் சோதனை.

3

பிறந்தநாள்தோட்டுப் பெயருநாளீறாக மாந்தர் புரிந்துவருகின்ற இவ்வுலக கருமங்களனைத்தையும் ஊடுருவிப் பிணித்திருக்குஞ் சூத்திரங் காரணகாரிய விதிவழி வரன்முறையொழுகுந் தொடர். இதனில், முதல் கடையெனு மிருபுறத்தமைந்துள ஆதிகாரணத்தின் அமைப்பையும் அந்தத்திலெய்துங் காரியத்தின் தன்மையையும் நேரே சென்று கண்டறிதல் எளியதொன் றன்று. ஆதலின், இவ் விருகோடிகளுக்கு மிடையே பல்வேறு தோற்றங்களோடு நிகழ்கின்ற செய்கைகளின் தன்மை நோக்கம் முடிவு முதலியவைகளைத் தேர்ந்துதேர்ந்து அத்தொடரினை முன்னும் பின்னும் பற்றிச் செல்வதால் அவ்விரு எல்லைகளின் நிலையை ஒருவாறு எய்தினவர்க ளாதலியலும். இவ்வண்ணஞ் செல்லுங்கால் மனமொழி மெய்களா லிழைக்கப்பெறுங் கருமங்கள் எண்ணிறந்தன நம்முன் நிகழக் காண்கின்றோம். இவைகளில், நிறமற்ற கருமங்களும் நிஷ்காம்ய கருமங்களும், கற்பு வாய்மை அனைய நிலைகளும், இக்கட்டுரையின் பார்வைக்குள் அடங்க வேண்டியனவே ஆயினும், பல கலந்து இதன் தெளிவினைக் குறைக்காவண்ணம், அவை தற்காலம் சிறிது விலக்கிவைக்கப்பட் டிருக்கின்றன. ஆதலின் எஞ்சியவை, நற்செய்கை தீச்செய்கை என்னும் பாகுபாட்டினுள் அடங்கும். இப் பாகுபாட்டின் உண்மையைச் சாதாரண அறிவு (Common sense) அயிர்க்கா தெனினும் தத்துவ உணர்ச்சிகொண்டு திருவுங்கால், மாந்தர் கொண்டிருந்த எண்ணங்கள் பல மாறுதலடைவது இயல்பே. நன்மைசெயல் என்பதும் நற்செயல்செய்தல் என்பதும் ஒருபொருளுடையனபோல் தோன்றினவெனினும் தர்க்கமெனும் விளக்கிற்கெதிர் அவை தலைமயங்குத லொழிந்து தனித்தனி விலகிய நிலையைச் சென்றநாள் கண்டனம். அக் காட்சியின் இறுதியில், கருமத்தின் தன்மை எத்தகையதாயினும் யாவரும் எங்கும் செய்வது நன்மையேயன்றி வேறொன்று மில்லை என்று நிறுத்திய உறுதியை இதன்மேல் தொடரவேண்டியவர்களா யிருக்கின்றோம்.

இரப்போர்க்கிரங்கி யீவோரும், ஈயா தனைத்துங் காப்போரும், இருப்பார் பொருளைக் கவர்வோரும், அயலான் மனையை யெரிப்போரும், புகழே வேண்டி வாழ்வாரும், பொல்லாங்கென்று அஞ்சாரும், பொருளை ஈட்ட முயல்வோரும் போற்றுதலனைச் சிதைப்போரும் செய்யுஞ்செயல்கள் எதுகருதி என்பதை அவைகளுக்குள் நுழைந்து தேடினால் புதைபொருள் சில புலப்படும். தமக்கில்லாப் பெருமையை இயம்பிக்கொள்கின்ற பொய்யர் பலர்; இருக்கின்ற பெருமையை எடுத்துக் காட்டுகின்ற இடம்பர் பலர்; தமது இன்மை தெரியாவண்ணம் நாணத்தால் மறைக்கப் புகும் வறியர் பலர்; இரவலர் வருவரேயெனத் தமக்கிருப்பதையும் மறைத்தொழுகும் வச்சையர் பலர்; இன்னோ ரன்னவருள் ளிருந் தியக்கின்ற நோக்கத்தைத் தெள்ளியெடுப்பின் ஐயம் பல தெளியும். இவைகளன்றி, காமம் வஞ்சினம் அழுக்காறு பேராவா போன்றன தூண்டத் துலங்கும் செயல்களும் ஆராயுங்கா லோ ரிரகசியத்தை வெளியாக்கும். தனக்கென வாழாது பிறர்க் குரியதாக்கும் செய்கைமுதல், தனக்கு விஞ்சியதையே தருகின்றது இடையாகி,

பிறர்கெடத் தான் பெருகுமாறு புரிகின்ற இறுதி வரையில் உடனிகழும் ஊக்கம் என்னவென் றுன்னினால் உணரப்பெறுவது ஒன்றேயாம்.

எத்திறத்தோர் செய்கையும், அச்செய்கை நிகழுங் காலத்தில் நன்மையே நாடுகின்றது. இச்செய்கை முற்றியபின்விளைந்தது தீமை என்ற முடிவினால், அதனைச் செய்தவன் செய்கின்றகாலத்தில் "தீமை செய்கின்றான்" என்னும் வாக்கியத்திற் கிலக்காகமாட்டான் என்பதை முன்னர் விளக்கினோம். தன்னையே கருதி செய்துகொள்கின்றவைகளில் இவ்வுண்மையைக் காண்பது அரியதன்று. வேளாண்மை செய்வோரும் வேசையரை விழைவோரும், ஆகிய இவ்விரு திறத்தோரும் தத்தங் கருத்தின்வண்ணம் தமக்கு ஒரு நன்மையே செய்துகொள்ள முயல்கின்றனர். முன்னவன் நன்மை முயல்கின்றானென்றும் பின்னவன் தீமையேபூண் டொழுகுகின்றானென்றும் பிறரால் இவ்விரு செயல்களும் பிரித்துப் பேசப்படுமெனினும், செய்கின்றவர் நோக்கம் இருதிறத்திலும் நாடுவது அவரவர் நன்மையே. நற்பெயரும் கைப்பொருளும் உடல்வலியும் ஒருங்கே தாம் இழப்பது தெரிந்தும் பரத்தைமனை புகுவோர் தமக்கு நன்மையைச் செய்துகொள்ளவே நினைக்கின்றனர் என்றுநா முரைக்க எவ்வாறு இயலும் எனத் தயங்கவேண்டா. ஒன்று கொடுத்தல்லாது இவ்வுலகில் மற்றொன்று பெறுவதில்லை. பொருளும் பெயரும் கொடுத்து இவன் தனக்கு ஒரு நலம் வாங்க முயன்றனன். துன்பத்தை விலைக்கு வாங்குமிது மதியீனமாகலாமேயன்றி, அச்செய்கையால் அவன் தீமையைத்தான் தான் அடையவேண்டுமென்ற நோக்கங்கொண்டிருந்தனன் என்று எண்ண இடமில்லை. காதல் கவறாடல் கள்ளுண்டல் போன்று, செய்பவனை அச்செய்கையின் பயனிற்கு முதன்முதல் உரியவனாயிருக்கின்ற கருமங்களனைத்திற்கும் இவ்வுரை ஒக்கும்.

இனி, களவு வஞ்சனை முதலியஇனத்துச் செய்கைகளைச் சோதிப்போம். இவைகளில், செய்பவனும் செய்கையு மல்லாமல் செய்யப்படுபவனும் ஒருவன் இருத்தல்வேண்டும். பிறன்பொருளைக்களவுசெய்தும் வஞ்சனையாலும் கொலைபுரிந்தும் கவர்ந்தது தீமை என்று கடிவதற் கொத்ததாயினும், இவைகளைச் செய்பவனுடைய நோக்கம் பிறனுக்குத் தீங்கு செய்ய வேண்டு மென்பதன்று. இதனால் மற்றவனுக்குத் தீங்கு நேருமென்பது அவனுக்குத் தெரிந்திருத்தல் உண்மையே ; தான் எண்ணிய நன்மைக்கு எதிராய்த் தனக்கே தீங்கு நேரலாமென அவன் அஞ்சவும் அஞ்சலாம். எனினும் தனக்கேனும் பிறர்க்கேனும் தீமைசெய்வது அவனது நோக்கமாகாது. இச்செயல்களை நிகழ்த்துகின்ற காலத்தில் அவன் தன்னுடைய நன்மையே செய்துகொள்கின்ற நினைவும் நோக்கமும் உடையவனாயிருக்கின்றான்.

பிறர் கேடே சூழ்வதுபோல் நிகழ்கின்ற செயல்களும்பல உள. பிறர்வாழ்வது காணப்பொறாமையால் அவரது பொருள் பெயர் உயிர் முதலியவைகளை அழிக்கவும், அவர் கைக்கொண்ட கருமங்களுக்கு இடையூறு செய்யவும் நேர்வார்தம் நோக்கத்தினை நுனித்துரைக்குங் காலையிலும், செய்பவர் தம் நன்மையே செய்து கொள்கின்றனர் என்று செப்புதல் வேண்டும். அயலான் மனை ஐந்தடுக்குக் கட்டியதற் காற்றாது தீவைப்பானொருவன் யாது செய்கின்றான்? அயலான் கெடுவதல்லால் இவனுக்கு இதனால் ஒரு இலாபமும் இல்லையே! ஆதலால் இவன் தீமையே செய்கின்றானென்பதல்லால் (தனக்கேனும்) நன்மை செய்துகொள்கின்ற நோக்கமுடையவன் என்று இவனை எவ்வாற்றால் இயம்புதற்கியலும், என்ற வோர் சங்கை எய்துதல் இயற்கையே.

ஆயினும் இவ்வகைச் செயல்களின் தன்மையை ஒருசிறிது உற்று நோக்கினால் உண்மை புலப்படுவது அருமையன்று. வருந்தி வந்தோர் அருந்துயர் களைந்து அவர் திருந்துமுகங் காண்பதால் இன்பம் எய்துவது சிலர்க்கு இயற்கையாயின், இருந்தவர் வருந்துமுகங் காண்பதாற் சிலர் இன்பம் அடைய முயல்வதில் வியப்பொன்று மில்லை. புறங்கூறியும் தீவைத்தும் பிறர்க்குக் கேடு சூழ்பவன் செய்கையின் நோக்கம் அந்தரம்பார்க்கின் அக்கேடு மாத்திரமன்று; அக்கேடு உறுவது கண்டு தனக்கு ஓர் இன்பம் சுரப்பதற் கிருக்கின்றது என்னும் நினைவே அச்செய்கையை நடத்திவைக்கின்றது. ஆதலின் இவ்வின்பமாகிய நன்மையை நாடிச் செய்கின்றனவனே யாகின்றான். எனின் அவன் செய்வது தன்னுடைய நன்மைக்குரியதெனு மொரு கருமமே யன்றிப் பிறனுடைய கேட்டினோடு முடிவது ஒன்றன்று. தான் கருதிய கணக்கின்படி இத்தகைய செயல்களால் தன்னுடைய நன்மை கைகூடுவதற்குப் பிறன் கேடொன்று அவசியமாகலாம். ஆதலின் அயல் வீட்டிற் றீவைப்போனொருவன் நற்செயலே செய்கின்றான். செய்து முடித்த இத்தகைய காரியம் ஒன்றைக் கண்டு 'இவன் நன்மை செய்தான்'' என்று இயம்புவது பொருந்தாதென்பது உண்மையே. முன், நன்மை செய்வதென்பதற்கும் நற்செயல் செய்வதென்பதற்கும் நாம் காட்டியுள்ள வேற்றுமையைக் கருத்துட்கொண்டால், அவாவினால் களவு கொலை கைதவங்கள் செய்வோனும், அழுக்காற்றால் பிறரது உடைமையை அழிப்போனும், இறுமாப்பால் கொடுமைகள் புரிவோனும் யாவரும் நற்செயல்களே செய்கின்றனர் என்னு மிம்முடிவு உலகம்மலைய உரைக்கப்பெற்ற தாகாது. தன்னுடைய நன்மையை வேண்டிச் செய்யப்படுவதால் பிறர்க்குத் தீமை விளைக்கும் செயல்களும் நற்செயல்க ளாகின்றன. இவ்வாறு உரைப்பதினின்று, செய்தவனேனும் நன்மையை அடைந்தான் என்று நாம் கூறுவதாக மதிக்கவேண்டா. செய்கையின் நோக்கத்தைச் சார்ந்துரைப்பதே யன்றி அதன் பயனைத் துணிந்து வகுக்கின்றோமென வெண்ணலொண்ணாது.

பிறர்க்கு அபகாரமாக நிகழ்த்துகின்ற செய்கைகள் அந்தத்தில் செய்பவன் தன் நன்மையைச் சாதிக்குங் கருத்துடையன ஆவதுபோலவே, பிறர்க்குஉபகாரமாகச் செய்யப்படுகின்றவைகளினது ஆழத்திலும் செய்பவனது நன்மையின் நோக்கமே நின்று இயக்குகின்றது. சுயநயமற்ற தூய்மையனென்று தன்னை யாவரும் கொண்டாடுவதால் விளைகின்ற மகிழ்வும், பரோபகாரி என்ற புகழும் இவன் நாடிக்கொள்ளும் நன்மையின் ஒருவகையன. மற்று, எல்லாரு மெங்கும் இன்புற்றிருப்பதுவே யன்றி யாதொன்றும் வேண்டாது வினைகள் புரிவோரும், அவ்வுலக இன்பத்தைக் கண்டு தாம் இன்புறும் நன்மையை நோக்காதிருப்பார் அலர். ஈத்துவக்கு மின்பம் என்று நாயனார் நுனித்துரைத்ததும் இதனையே யாம்.

எனின், தமக்கேனும் பிறர்க்கேனும் தீமையே எய்துக நன்மையே எய்துக, செய்பவர் செய்யுங் கருமங்கள் அனைத்தும் நற்கருமங்களே என்னுந் துணிவு பெற்றோம்.

அப்பர்

8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

[124-வது பக்கத் தொடர்ச்சி]

3. குழல் அல்லது வேணு

(ii) குழலின் வகை

குழல் ஐவகைப்படும். அவற்றின் பேதம் அவை யாக்கப்படும் பொருள்களின் பேதமே. இவையே முற்காலத்தில் வழங்கிய குழலென்னும் வங்கிய இசைக்கருவி யாம்.

ஓங்கிய மூங்கில் உயர்சந்து வெண்கலமே
பாங்குறு செங்காலி கருங்காலி—பூங்குழலாய்
கண்ண னுவந்த கழைக்கிவைக ளாமென்றார்
பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து.

எனவே மூங்கில், சந்தனம்,வெண்கலம், செங்காலி கருங்காலி என்னும் ஐந்தும் குழலமைக்கப் பயன்படுமென்பர் இசைவல்லோர். இவற்றுள் மூங்கிலிற்செய்த குழல் உத்தமம்; வெண்கலம் மத்திமம்; ஏனைய அதமமென முன்னோர் மொழிவர். இவற்றுள், மூங்கில் பொழுது செய்யும், வெண்கலம் வலிது ; மரம் எப்போதும் ஒத்து நிற்கும். ஆயின் மேற்கண்ட மரங்களில் குழல் அல்லது வங்கியம் செய்வதானால், நல்ல மரத்தை வெட்டி ஒருவருடம் நிழலில் உலரவைத்துப் பக்குவஞ் செய்தபிறகே எடுத்துக் குழலமைப்பர் :—

உயர்ந்த சமதலத் தோங்கிய னான்கின்
மயங்காமை நின்ற மரத்தின்—மயங்காமே
முற்றிய மாமரம் தன்னை முதறடிந்து
குற்றமி லோராண்டிற் கொளல்.

மேற்சொன்ன குழல்களில் வெண்கலக்குழலே தற்கால நாகசுரத்தின் மூல பிதாவாம். வெண்கலத்தில் துளைக்கருவி யூதியவர்கள் செல்வப்பெருக்கால் வெள்ளியிலும் பொன்னிலுஞ் செய்து இசைபாட, அதனினும் சிறந்த நாதம் ஏற்பட்டதில், வெள்ளி நாகசுரமும்,பின்னர்த்தங்கநாகசுரமும் வழங்கலாயின. நாகம் அல்லது பாம்பை வயப்படுத்தியதால், இவ்விசைக் கருவிக்கு நாகசுரம் என்னும் பெயர் வந்தது. கருங்காலியிலும் ஏனைய பல மரங்களிலும் இப்போது இவ் விசைக்கருவியைக் காண்கின்றோம். இதை வாசிப்போர் பலகுலத்தவர் பெருவழக்கில் தாம் தாம் புராதீனரென ஆழ்ந்திருப்பதாய்த்தெரியவருகின்றது. என்ன பாவம்!

மேற்கூறியபடி ஆக்குதற்குரிய பொருள்களின் பேதங்களாற் குழல்வகை கண்டோம். காரணக் குறிகளாலும் குழல் மூவகைப்படும் :— (i) கஞ்சத்தாற் குமுதவடிவாக அணைசு பண்ணிச் செறித்தலின் ஆம்பற் குழலெனவும், (ii) கொன்றைப் பழத்தைத் துருவித் துளைத்து ஊதலிற் கொன்றைக் குழலாயிற்றெனவும், (iii) முல்லைக் கொடியால் முப்புரியாகத் தெற்றிய வளையை வளைவாய்க்கட் செறித் தூதலின் முல்லைக்குழலெனவும் நமது முன்னோர் கொள்வர். இக்குழல்களால் இப்பெயர்கள் கொண்ட பண்களும் தமிழில் வரநேர்ந்தன. ஆம்பற்பண்-மொழியாம்பல், வாயாம்பல், முத்தாம்பல் என்னும் மூவகைத்தாம்.

இனி, குழலின் அளவும் உருவும் சற்று நோக்குவோம்:— நீளம் இருபது விரல், சுற்றளவு நாலரை விரல் *. இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒரு பாதி மா நிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே அணைசு பண்ணி இடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாக விடுவர். வங்கியத்துளை யளவு † நீளம் இருபது விரலில், தாம்பு முகத்தின் இரண்டு விரல் நீக்கி முதல்வாய்விட்டு, அம் முதல்வாய்க்கு ஏழங்குலம்விட்டு வளைவாயினும் இரண்டுவிரல் நீக்கி,நடுவினின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளையிடுவர். இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்து நீக்கி, நின்ற ஏழினும் ஏழு விரல்வைத்து ஊதப்படும். துளையின் பரப்பு ஒருவிர லகலம் பெறும். இதனால் இசை சுத்தமாய் வெளிவருமென்பர் நமது தமிழிசை வல்லார். செம்பொன்னால் இத்துளைகள் துளைக்கப்படின், எங்ஙன மிருக்குமென்பது இசைப்புலவர் ஆராய்க :—

விளைக்கின்ற நீராகி வித்து மாகி
விண்ணொடு மண்ணாகி விளங்கு செம்பொன்
துளைக்கின்ற துளையாகிச் சோதி யாகித்
தூண்டரிய சுடராகித் துகளின் வான்மேல்
முளைக்கின்ற கதிர்மதியு மரவு மொன்றி
முழங்கொலிநீர்க் கங்கையொடு மூவா தென்றுந்
திளைக்கின்ற சடையானைத் திருமாற் பேற்றென்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேனானே

திருமாற்பேறு-திருத்தாண்டகம் 2.

(iii) குழலிசை

சொல்லிய வியல்பிற் சித்திர வஞ்சனை
புல்லிய வறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கு மயலறப் பெய்தாங்
கேற்றிய குரலிளி யென்றிரு நரம்பின்
ஒப்பக் கேட்கு முணர்வின னாகிப்
பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்து
தண்ணுமை முதல்வன் றன்னொடும் பொருந்தி
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்
கிசையோன் பாடிய இசையி னியற்கை
வந்தது வளர்த்து வருவ தொற்றி
யின்புற வியக்கி யிசைபட வைத்து
வார நிலத்தைக் கேடின்றி வளர்த்தாங்
கீர நிலத்தி னெழுத்தெழுத் தாக
வழூவின் றிசைக்குங் குழல்''

சிலப்பதிகாரம் - அரங்கேற்றுகாதை 56-69.

---

* இதன் பிண்டி யிலக்கணம்:—
சொல்லு மிதற்களவு நாலைந்தாம் சுற்றளவு
நல்விரல்க னாலரையா நன்னுதலாய்—மெல்லத்
துளையளவு நெல்லரிசி தாம்பிட மாய
வளைவலமேல் வங்கிய மென்.

† துளையள விலக்கணம்:—
இருவிரல்க ணீக்கி முதல்வாயேழ் நீக்கி
மருவு துளையெட்டு மன்னும்—பெருவிரல்கள்
நாலஞ்சு கொள்க பரப்பென்ப நன்னுதலாய்
கோலஞ்செய் வங்கியத்தின் கூறு.

யாழுக்கும் குழலுக்கும் உள்ள பேதம் இசையில் என்னையெனின், யாழிலும் வீணையிலும் வாசிக்கும் எழுத்துக்கள் ஒன்றிலொன்று கலந்தொலிக்கும்—"ச—நி" என்று ஸ்வரம் வரின், "ச"வின் சப்தம் ஒலித்துக்கொண்டிருக்கும்போதே "நீ" என்பது துவக்கி இரண்டும் கலந்தொலிக்கும். குழலிசையின் விசேடம் "எழுத்தெழுத்தாக இசை திருத்தமாய் யாவரும் அறியும்படி ஒலிப்பது". இதன் காரணம் என்னையெனில் துளைகளில் ஏழு விரல்கள் மாற்றி மாற்றி ஊதுங்கால முன்னொலியும் பின்னொலியும் கலப்பினும் நரம்பினுட்டத்தால் ஓசை நீள்வதுபோல் துளையில் அவ்வளவு நீள்வதில்லை. அதனால் எழுத்தெழுத்தாக இசை விளங்கும். ஏழுவிரல்களாவன-இடக்கையின் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றைய மூன்று விரலும், வலக்கையின் பெருவிர லொழிந்த நான்கு விரலும் ஆக ஏழுவிரல்களை யாம்:—

வளைவா யருகொன்று முத்திரையாய் நீக்கித்
துளையேழி னின்ற விரல்கள்—விளையாட்
டிடமூன்று நான்குவல மென்றார்க ணோகா
வடமாரு மென்முலையாய் வைத்து.

இவ்வங்கிய ஏழு துளைகளில் ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழெழுத்துப்பிறக்கும் இவ்வேழெழுத்துக்களையும் மாத்திரைப்படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும்:—இதையே சம்பந்தர்,

ஈருய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறுமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானிடம் வீழிம்மிழ லையே"

திருவீழிமிழலை - பண் - நட்டபாடை 2.

என்பதிலும்,

பண்ணும்பத மேழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதோர்சுவையும்முறு தாளத்தொலிபலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே"

ஷை. 4.

என்பதிலும் குறிப்பிட்டார்.

ஏழிசையாவன-சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாத மென்பன. இவை பிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும்:—

சரிக மபதநியென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத்—தெரிவரிய
வேழிசையுந் தோன்று மிவற்றுள்ளேபண்பிறக்குஞ்
சூழ்முதலாஞ் சுத்தத் துளை.

இதை யெண்ணியோ, சுந்தரமூர்த்திநாயனாரும் தம் திருக்கேதாரத் திருப்பதிகத்தில்,

பண்ணின்றமி ழிசைபாடலின் பழவேய்முழ வதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை வயிரம்மவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கண் மணிவாரிக்கொண் [டெறிய
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமெ னீரே,

என்றார்போலும். இப்பண்ணின் பெருமையை அப்பர்,

துண்ணெ னாமனத் தாற்றொழு நெஞ்சமே
பண்ணி னான்முனம் பாட லதுசெய்தே
எண்ணி லாரெயில் மூன்று மெரித்தமுக்
கண்ணி னான்கடம் பூர்க்கரக் கோயிலே.
பண்ணி னார்மறை பல்பல பூசனை
மண்ணி னார்செய்வ தன்றியும் வைகலும்
விண்ணி னார்கள் வியக்கப் படுவன
கண்ணி னார்கடம் பூர்க்கரக் கோயிலே.

திருக்கடம்பூர்-திருக்குறுந்தொகை 4-7.

சிலப்பதிகாரத்தில் நீர்ப்படைக் காதையில் நாலு நிலத்துப் பாணி கூறுங்கால, இளங்கோவடிகள் (வரி 240-41)

"காவல னினிரை நீர்த்துறை படீஇக்
கோவல ரூதுங் குழலின் பாணியும்"

என இசைக்கருவியால் வாசிக்கும் தேவபாணியையே முல்லைநிலத்திற் காட்டி ஏனைய நிலங்களில் இசைக்கருவியின்றி அந்நிலமக்கள் பாடும் பாணியைக் கூறியதைக் காண்க.

இவ்வாறுவாசித்தல்"வண்ணப்பட்டடை யாழ்மேல் வைத்தாங்கு" இசையெழுப்பு மென்பர்:—

" இணைநரம் புடைபன வணைவுறக் கொண்டாங்
கியாழ்மேற் பாலை யிடமுறை மெலியக்
குழன்மேற் கோடி வலமுறை மெலிய
வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம்
பொலிய" என்றனர் இளங்கோவடிகள்.

யாழ் எவ்வாறு இடதுபக்கத்தில் நல்லிசை யெழுப்புமோ, அவ்வாறே குழல் வலது பக்கத்தில் நல்லிசையெழுப்பும். யாழிடத்து அரும்பாலை இடமுறை மெலிவதுபோல், குழலிடத்துக் கோடிப்பாலை முதலியன வலமுறை மெலியுமென்பர் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர்.

பலவகைக் குழல்களிலே முல்லைக்குழலே நமது முன்னோர் ஊதி யானந்தித்ததாம். முல்லைத்திணை, அகப்பொருள்வகையில், இருத்தலும், இருத்தலி னிமித்தமுங் காட்டுமாதலால், மகளிர்குழலுக்கும் ஊதுங்குழலுக்கும் சிலேடையாய் இளங்கோவடிகள்,

"தாழ்துணை துறந்தோர் தனித்துய ரெய்தக்
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்தக்
குழல்வாய் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத"

அந்திமாலைச் சிறப்புச்செய் காதை 14-16.

என்று மொழிவதுபோலவே, திருநாவுக்கரசரும்

சொன்மாலை பயில்கின்ற
குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு
பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள்
முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென்
புதுநலமுண் டிகழ்வானோ ?

திருப்பழனம் - பண் - பழந்தக்கராகம் 1.

என்றவர்,

மனைக்காஞ்சி யிளங்குருகே
மறந்தாயோ மதமுகத்த
பனைக்கைம்மா வுரிபோர்த்தான்
பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லாம்
உரையாயோ நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள்
சொற்றாதாய்ச் சோர்வாளே !

ஷை 3

என்றனர்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

நடத்தை (Behaviour)

இதன்மேல் முதுகெலும்பிகளை (Vertibrates) ஆராய்வோம். இவற்றில் கீழ்நிலையில் உள்ளன மீன்களேயாம். தூண்டிலை ஒருமுறை கௌவுகின்றது ஒரு மீன்; நல்ல காலத்தின் பயனாக விடுபடுகின்றது. ஆனால் மறுமுறையும் தூண்டிலைக் கௌவ ஓடுகின்றது. ஆதலினால், அம்மீன் தான் முன்னறிந்ததைப் பயன்படுத்திக் கொள்வதில்லை என்றும் அதற்கு அறிவே இல்லை என்றும் சிலர் முடிவு கட்டலாம். ஆனால், உற்று நோக்குமிடத்து, அவையும் பழைய நுகர்ச்சியால் (Experience) பயனடைவனவாகவே விளங்குகின்றன. பலர் வந்து பலநாளும் தூண்டிலிடும் ஆற்றில் மீன்கள் எளிதில் சிக்குவதில்லை. சில இடங்களில் மீன்களைப் பழக்கிவைத்திருப்பவர் மணிஅடித்ததும் உணவை வீசுவர். இப்பழக்கத்தால், மணியொலி கேட்டதும் மீன்கள் உணவைநாடி வெளிவருகின்றன. இவ் வெண்ணத்தியைபு (Association of ideas) அறிவின் இயல்பன்றோ ? சில மீன்கள் குளவிகளைப்போல இடவாராய்ச்சி (Local study) செய்து குறித்த இடத்திற்குத் திரும்பிச் செல்கின்றன. குறித்த இடத்திற்கு நீந்தி வந்து முட்டையிட்டு அவற்றைக் காத்து அருகே திரிவதைப் பலரும் கண்டு வைத்துள்ளார்கள்.

130வது பக்கத் தொடர்ச்சி

ஊர்வனவும் (Reptiles) இவ்வாறு அறிவு விளக்கத்தோடு காணக்கிடக்கின்றன. பட்டினத்தில் வாழும் எலிகள் எளிதிலே எலிக்கூட்டில் விழுவதில்லையன்றோ ? பறவைகளும் அங்ஙனமே. கூடுகட்டல், இணை விழைச்சு, கூவிக் குலாவுதல், உணவு நாடல், முதலியவை பறவையின் இயற்கைச் செயல்கள். இவை, ஒவ்வோர் இனத்திற்கு ஒவ்வொரு வகையில் அமைந்து கிடக்கின்றன. எனினும், இவை இடத்திற்குத் தக்கவாறு மாறுவதையும் காண்கின்றோம். கிளிகள், மக்களைப்போலச் சில சொற்கள் பயிற்சியால் பேசுவது காண்க. பறவைகளும், குளவிகளைப் போலக் கூடுகட்டி இரை தேடிப்போய் மீள்கின்றன. ஆதலின் இவையும் இடவாராய்ச்சி செய்து இடநிலையின் உணர்வால் (Perception) திரும்புகின்றன என்பது தேற்றம்.

பறவைகள் தம்மினத்தை எவ்வாறுணர்ந்து கொள்கின்றன ? அவை, இணை இணையாய் ஆணும் பெண்ணுமாய்ச் சாகும்வரை வாழ நாம் காணவில்லையா ? ஆண் பறவை தனது மனையாட்டியை எவ்வாறு அறிகிறது. இனத்தையும் பாலையும் (Sex) அறிவதற்குக் குரலும், வடிவும், நிறமும் பயன்படுகின்றன. குரல் ஒலி திருத்தமுற்று விளங்குகின்ற பறவைகளில் நிறம் அவ்வளவு உயர் நிலையில் விளங்குவதில்லை. குரலின் இனிமை காதைக் கவராதபோதுதான் நிறவழகு கண்ணைக் கவர்கின்றது. கண்ணைக் கவராத வானம்பாடி, காதைக் கவர்கின்றது; காதைக் கவராத மயில் கண்ணைக் கவர்கின்றது.

வானம்பாடி பாவலர்களது மனதை எல்லாம் கவர்ந் தடிமைகொண்டது. அதன் பாடல் வெறும் ஒலிக்கூட்டம் அன்று. ஒலிக்கிளர்ச்சி உருகி வழிந்து ஓரியைபுபெற்று இனிமை வடிவாய்த் திரண்டு இசையாகி விளங்குகின்றது. இதனை நம் உள்ளம் கொள்ளும்பொழுது, இது புலனாகி வருகிறது (Sensation) எனலாமோ ? ஒலிக்கிளர்ச்சியின் இயைபினையும் தொடர்பினையும் ஒருசேர உணரும் உணர்வன்றோ (Perception) ஈது. ஆண் வானம்பாடி பாடும்போது பெண் வானம்பாடி கேட்கின்றது. பெட்டை அதற்கு முன் அதனைக் கேளாமலே வாழ்ந்திருத்தலுங் கூடும். இப்பெண்பறவை பாட்டைக் கேட்டறிதல், உணர்வேயாகும் (Perception). குறித்த ஒரு பண்ணை வேற்றுமைகண்டுணர்வதுபோல் அன்றோ உள்ளது இவ்வுணர்வும். இவ்வொலியை விட்டால், வேறெவ் ஒலியும் இப் பெண்பறவையின் மனதை இவ்வாறு உருகச் செய்வதில்லை. ஆண்பறவையின் பாடல் வடிவமான தொடர்ஒலி இயைபு ஒன்றுதான் இதனை இவ்வாறு மனம்மாறச் செய்கின்றது. காட்சிப்பொருளாய் நின்ற இவ்விசை வெற்றொலியன்று; சிக்கலான தொன்றாகும். கூட்டிலிருந்து புறப்படும் குளவி இடவாராய்ச்சி செய்து, இடைவெளிப் பொருள்களின் இயைபினை உணர்வதுபோலப் பெண்பறவையும் ஒலித்தொடரின் இயைபினை உணர்கின்றது. ஈதோர் ஒற்றுமைக் காட்சியாகும் (Synthetic activity).

சில பறவைகள் சிறகுகளின் அழகால் தத்தம் மனைவியரை மயக்குகின்றன. சூடோ (கொண்டை) தோகையோ ஆண்பறவைக்கு அழகாக விளங்குகின்றது. பாலறி குறியாக எழுந்த இசையும் தோகையும் வானம்பாடியினிடத்தும் மயிலினிடத்தும் தத்தம் பெண்பறவைகளை மயக்கிவைக்கும் நிலையில் திருத்தமுற்று விளங்குகின்றன. ஆண் மயிலின் தோகையழகையும் நிற அமைதியையும் கண்டு பெண்மயில் காதல் கொள்ளுகின்றதென்பதில் ஐயமில்லை. மயிலின் தோகை பற்பல நிற வேறுபாட்டோடும், வட்டவடிவ அழகோடும், விளங்குகின்றது. ஆதலின் அது வெறும் தூண்டலன்று; வெறும்புலனன்று. நிறத்தின் இயைபினை உணர்தல் சிக்கலான ஓர் உணர்வாகும் (Perception). எனவே, இவ்வுணர்வு அல்லது காட்சியறிவு பெண்மயிலுக்கும் உண்டு என்பதாயிற்று.

குதித்துக் கூத்தாடியும் ஆண்பறவை, பெண்பறவையைக் காதல்வலையிற் சிக்கவைக்கின்றது. மயிலின் கூத்தினை அறியாதார் யார் ? வான்கோழி ஆடுவதனை ஒளவையும் பாட்டாகப் பாடிவிட்டாள். ஆட்டப்புறாவும் மார்பை முந்துறத்தள்ளித் தலையைப் பின்னாக வளைத்து மிடுக்காக ஆடிநடக்கின்றது.

கண்குளிரும் சிறகாலோ, செவி குளிரும் இசையாலோ, மனமுருகும் கூத்தாலோ ஆண், பெண்ணை மயக்கி மருவுகின்றது. ஒளிவிளக்காய்ச் சிறகை விரித்தாடுதல், மனங்கனியப் பாடுதல், கண்களிக்க ஆடுதல், என்ற இம்மூன்று வகையான ஆண்பறவையின் காதற்செயல்கள், அதன் நடத்தையே என்க. இம்மூன்று பாலறிகுறிகளில் ஒன்றேனும் இல்லாதபோது பறவையே மற்றொரு பறவையை உணர்ந்தறி

வது இயலாததாகிறது. ஆண்,பெண்ணை உணர்வதும் அருமையாகின்றது. அந்நிலையில் ஓர் ஆண் மற்றோர் ஆணை மருவக் காண்போம்.

இவ்வாறு குறித்த ஒருவகையில் ஆண்பறவை இயங்கினால்தான் பெண்பறவை காதல்கொள்ளுகின்றது. அவ்வாறு குறித்தவொரு வழியில் காதல்கொள்ளுவது அப் பெண்பறவையின் இயல்பு என்க. அந்நிலையில் பெண்பறவை ஆணுக்கு அடங்கிச் செயலற்று நிற்கின்றது. முழங்காற் கடியில் தட்டியவுடன் காலடியை முன்னுக்குத் தள்ளுகின்றமை ஒரு மடக்குச் செயல் எனக் கண்டோம். அத்தகைய மடக்குச்செயலோ, தூண்டல் நிகழ்ந்த உடனேயே நிகழ்வது. ஆனால் காதல் கொள்ளுதலென்பது இரண்டோர் இமைப்பொழுதில் முடிவதுவோ? சிலபொழுது பலநாட்களும் செல்கின்றன அன்றோ? இவ்வாறு இயற்கைச் செயனிலையை (Instinct) எழுப்பி எதிரூன்றல் செய்யும் (Reaction) ஆடல் பாடல் அழகு முதலியன வெறும் தூண்டல்கள் (Stimulus) அல்ல. அவை காட்சிப்பொருளாய் (object) இயைந்து வடிவு பெற்றனவாகும்.

இயற்கைச் செயனிலையோ, நமது உள்ளத்தமைப்பாகும். அஃது ஒரு பூட்டு என்றும், பாட்டாகவும் கூத்தாகவும் எழுகின்ற ஒற்றுமை உணர்வே அதைத் திறந்து வைக்கும் ஒரு திறவுகோல் என்றும், மக்டூகல் (Mcdougall) என்ற பெரியார் புகழ்கின்றார். பூட்டும் திறவுகோலும் ஒன்றுபோல் ஒன்று விளங்காமல் வேற்றுமைப்பட்டுத் தோன்றுகின்றன. ஆனால், ஒன்று இன்றி மற்றொன்று பயன்படுவதில்லை. ஒன்றுக்கு ஒன்று துணையாகின்றது. பெண்பறவையினிடத்து விளங்கும் இயற்கைச்செயனிலை யாகும் உள்ளத்தமைப்புப் பூட்டாக நிலவுகின்றது; அதனைத் திறந்து வைக்கும் திறவுகோலோ ஆண் பறவையினிடத்துக் கூத்தாகவும் பாட்டாகவும் அழகிய சிறகுகளாகவும் விளங்குகிறது. இத்திறவுகோல் ஒன்று கொண்டுதான் அப்பூட்டைத் திறக்கக் கூடும். வேறு திறவுகோல்களால் பயனில்லை இத் திறவுகோலைக் கண்டவுடனேயே இப்பூட்டுத்திறப்பதில்லை; ஈதொரு சிக்கலான பூட்டு; திறவுகோலைத் தக்கவழியில் தகுதியறிந்து திருப்பினால்தான் பூட்டுத் திறக்கும். மயில் தன்னாட்டத்தின் தகுதியறிந்தும், பெண்மயிலின் நிலையறிந்தும் மாறிமாறி ஆடுவது காண்க. வானம்பாடியும் தன் பெண்பறவைக் கேற்றவாறு தொடர்ந்து பலநாள் பாடுவதும் காண்க. மயிலின் கூத்தினை என் என்பது! வானம்பாடியின் பாட்டினை என்னென்பது? பாட்டையும் கூத்தையும் பெண்பறவை கண்டுகளிக்குமுறையில், அதற்கிசைந்த வழியில் முயற்சியோடும் தகுதியோடும் பயன்படுத்துகின்றன. இப் பேழையைத் திறப்பதும் சிக்கலான செயலேயாகும். செல்வமுள்ளவர்கள், காவல் மிகுந்த சூத்திரப் பேழைகள் வைத்திருக்கின்றனர் அன்றோ? அத்தகைய சிக்கலான பேழை போன்றது இவ் வியற்கைச்செயனிலையும் என்க.

உள்ளடங்கியிருந்த ஆற்றல் வெள்ளம் பூட்டுத் திறந்ததும் அலைபுரண் டோடுகிறது. அவ் வாற்றலால் அன்றே பல தொழில்களையும் தொடர்ந்து செய்வது இயலுவதாகின்றது. இணைவிழைச்சு, இடவாராய்ச்சி கூடுகட்டல், முட்டையிடல்,குஞ்சுபொரித்தல், இரை தேடல் முதலிய செயல்களைத் தொடர்ச்சியாகச் செய்துபோகின்றது பறவை. இவை முடிந்ததும் பழையபடி காதல்செய்யத் தொடங்குகின்றது. 'எத்தொழிலை முன்செய்தல் வேண்டும்; எத் தொழிலைப் பின்செய்தல் வேண்டும்?' என்ற தகுதியறிவும் பறவைகட்குஇயற்கையாக அமைந்துள்ளது. கூடுகட்டிய பின் முட்டையிடுகின்றனவே யன்றி முட்டையிட்டபின்னே கூடுகட்டுகின்றன? இயற்கைச் செயனிலை, காட்சியறிவாம் உணர்வாலேயே (Perception) கிளர்ச்சியுறுகிறது, இயங்கத் தொடங்குகிறது. இவ்வாறு காட்சிப்பொருளை உணரும் இயல்பு,வேண்டப்படுகின்றது ஆணுக்குக் கூத்தாடும் இயல்பு எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாததே பெண்ணின் சிறப்பு உணர்வும் (Perception) என்க. அப்பாட்டும், ஆட்டமும் எவ்வளவு அழகாக இருந்தாலும் வானம்பாடி மயிலைக்கண்டு காதலிப்பதில்லை; மயில் வானம்பாடியைக் கேட்டுக் காதலிப்பதில்லை. தன் பூட்டிற் கேற்ற திறவுகோல் என்ற சிறப்புணர்வு தோன்றினால் அன்றி இயற்கைச் செயனிலை இயக்கமுறுவதில்லை. குளவிகளில் ஒவ்வோரினமும் ஒவ்வொரு வகையான இரை தேடுகின்றது எனக் கண்டோம். குளவியின் இயற்கைச் செயல்தான் என்ன? இரையைத்தேடிக் கண்டதும், அதனைப் பிடித்துத் தன் வளைக்குக் கொண்டு செல்வதே யன்றோ? இயற்கைச் செயனிலையாம் இப் பூட்டோ அதற்கேற்ற திறவுகோலாகிய குறித்த ஓர் இரையைக்கண்டால்தான் திறந்தியங்கத் தொடங்குகின்றது. எரிப்புழுவைத் தேடும் குளவி அதனைக்கண்டால்தான் இரைகொண்டுசெல்லும் இயற்கைச்செயனிலையைத் தொடங்குகின்றது. அவ்வாறே சிலந்தி கொண்டுசெல்லும் குளவியும், விட்டில் கொண்டுசெல்லுங் குளவியும் தத்தம் இரையைக் கண்டால்தான் இயற்கைச் செயலுறுகின்றன. இங்கு, குறித்த ஓர் இரையின் வடிவத்தையும் இயக்கத்தையும் உணரும் உணர்வே திறவுகோலாக அமைகின்றது.

ஒவ்வோர் இயற்கைச் செயனிலையிலும் விடாய் என்பதொன்று இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. பசி நீர்வேட்கை முதலிய இடத்தில் விடாய் இன்னதென அறிவோம். விடாய் (Appetite) இல்லாதபோது நாம் உண்ணுவதில்லை. பசி முதலிய சில இயற்கைச்செயனிலையில் இவ்விடாய் நன்கு புலனாகின்றது; சண்டையிடல் முதலிய இடங்களில் நன்கு புலனாவதில்லை. காதல்விடாய் என்பதும் ஒன்று உண்டு எனப் பாவலர்கள் பாடுகின்றனர் அன்றோ? ஒவ்வொரு இயற்கைச்செயனிலைக்கும் ஒவ்வொரு விடாய் உண்டு. பசியாறிய விலங்கு வேட்டையாடுவதில்லை. மிகக் குடித்தவன் மேலும் குடிக்க விரும்புவதில்லை. அவனுக்குமறுபடியும் குடிவிடாய்வருமானால் தான் குடிப்பான். பறவைகள் இணைவிழைச்சு நாடுவதும் காதல்விடாய்எடுத்தால்தான்.இல்லாமற்போனால் பூட்டும் இருக்கலாம், திறவுகோலும் இருக்கலாம், அவை எந்நாளும் ஒன்றுகூடுவதில்லை. விடாய் எழுதல் வேண்டும்; அப்போதுதான் இயற்கைச்செயனிலை இயங்கத் தொடங்குகின்றது. பறவைகள் விலங்குகள் முதலாயவற்றிற்குக் குறித்தபொழுதில்தான் குறித்த விடாய் எழக் காண்கிறோம். காதல் விடாய் எழும்காலம் உண்டு. சண்டை விடாய் எழும்காலமும்

உண்டு. அப்போது எடுத்ததற் கெல்லாம் சண்டைதான் என்க. காதல் விடாய் ஆறியதும், கூடுவிடாய் எழுகிறது. பறவையும் கூடுகட்டுகிறது. பின் அடைவிடாய் எழுகிறது. முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கின்றது. பின்னர் இரைவிடாய் எழுகிறது. இரைதேடப் பறந்து செல்கின்றது. சிலபொழுது திறவுகோல் இல்லாதபோதும் இவ்விடாய் எழக் காண்கின்றோம். அந்நிலையில் அவ்வுயிருளி ஆறுதல் சிறிதும் இன்றி "இன்னதே தன் குறை" எனத் தெளிவாக உணராமல் திகைக்கின்றது. உள்ளிருக்கும் ஆற்றல் ஊற்று, இயக்கநரம்பமைப்பில் பாய்கின்றது. நாட்டமின்றி இயங்கத் தொடங்குகிறது.தன் திறவுகோலைக் கண்டறியும் வரை இவ்வாறு அலைக்கழிப்புறுகிறது; கண்டதும் அவ் வாற்றல்வெள்ளம் குறித்தவழியே பாய்ந்து இயற்கைச்செயலை எழுப்பிவிடுகின்றது. இயற்கைச் செயனிலையின் ஆற்றலோ, நமது உடனிலையைப் பொறுத்ததாம். உடற்சூடு, உணவு, அகத் தும்மிழ்நீர் முதலியன நமது இயற்கைச் செயலை உருப்படுத்துகின்றன. இதனைச் சிறிது பொறுத்துக் காண்போம்.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய் மொழி.

[135-வது பக்கத் தொடர்ச்சி]

முதல்பத்து விமர்சம்.

2-ம் பாசுரம்:

மனனக மலமற மலர்மிசை எழுதரு
மனனுணர் வளவிலன்பொறியுணர் வவையிலன்
இனனுணர் முழுநலம் எதிர்நிகழ் கழிவினும்
இனனில னென்னுயிர் மிகுநரை யிலனே.

அவதாரிகை:—முதல்ப்பாட்டில் கூறிய ஞானஆனந்தாதி கல்லியாண குணங்களுக்கு ஆச்ரியமான திவ்வியாத்ம சுவரூபத்தை இப்பாட்டு ஆராய்கிறது. பகவத் சுவரூபத்தை விளக்குவதே இப்பாட்டுக்கும் மேல்பாட்டுகளுக்கும் இலக்கு.

பொழிப்புரை:—வெளியிந்திரியங்களால் உணரக்கூடிய அசேதநவஸ்துக்களைக் காட்டிலும் திவ்வியாத்ம சுவரூபம் (பகவத்சுவரூபம்) வேறுபட்டு விலக்ஷணமாயுள்ளது. அதுபோலவே, யோகாப்பியாஸத்தாலும் பரிசுத்தமான மனதாலும் அறிவதற்குத் தகுதியான பரிசுத்தாத்ம சுவரூபத்திற்கும் வேறுபட்டு, சென்ற நிகழ் எதிர்காலங்களிலும் ஒப்பில்லாது, அவனினும் மிகுந்தவரில்லாதானாய் வேறு கலப்பில்லாத பரிபூரண ஞானஆனந்த சுவரூபனாகி, என்னைவிட்டுப் பிரிக்கக் கூடாமல் எனக்கு உயிராய் நிற்கின்ற எம்பெருமானுடைய திருவடி மலர்களிலே தொழுது எழு; என்கின்றார்.

பதவுரை.

பொறியுணர்வு - இந்திரியங்களால் அறியக்கூடிய வஸ்துக்களுடையதன்மை; அவையிலன்- அந்தச்சுபாவங்கள் இல்லாதவன் - அதாவது, அசேதனங்களைக் காட்டிலும் வேறுபட்டவன்.

மனன் - மனசு,மனதை ஆண்பாலாக்கிக் கூறுகிறார். அகம் - உளம், மலம்-குற்றங்கள்.அதாவது (i) ரஜஸு தமசு (ii) அல்லது அவித்தை காமகுரோதங்கள்; அற- யோகாப்பியாஸத்தால் அற்றுப்போன அளவில்; மலர் - மலருகிற, மிசை - மேலே, எழுதரு-மேன்மேல் வளர்கின்ற; மனனுணர்வு - மனோஜன்னிய ஞானம், அதாவது இந்த ஞானத்தால் உணரப்படுவதான ஆத்ம சுவரூபத்தின், அளவு- பிரகாசம், இலன் - இல்லாதவன், அல்லது - மனனுணர்வு - மானஸ ஞானத்தால், அளவிலன் - அளவிடக்கூடாதவன், இவன் - இப்பேர்ப்பட்டவன்.

எதிர் நிகழ் கழிவினும் - முக்காலத்திலும், இனனிலன் - ஒப்பற்றவன் (இனம் - சதர்சம்); மிகுநரை - அதிகப்பட்டவரை, இலன் - இல்லாதவன். முழுவுணர்வு-கலப்பில்லாத பூரணஞானம்,முழுநலம்-கலப்பில்லாத பூர்ண ஆநந்தமயமான ஸ்வரூபன் என்றபடி. என்னுயிர் - எனக்கு உள்ளிருக்கும் ஆத்மா.

முன் பாட்டின் "தொழுதெழு" என்கிற வினைச்சொற்கள் தொக்கு நிற்பதாகக் கூட்டி அந்வியத்துக் கொள்க. கடைசியில் இப்பத்து "பாஷைமேல் குருகூர்ச் சடகோபன் சொல்" என்று முடித்திருப்பதால் இப்படிக்கு அர்த்தம் கொள்வது உசிதமென்பது பூர்வாசாரியரின் கருத்து.

என்னுயிர் - இதை ஜீவாத்ம பரமாத்ம சம்பந்தத்தை வேதாந்திகள் சரீரசரீரி பாவம் என்பார்கள். ஜீவாத்மாவுக்குப் பரமாத்ம சம்பந்தம் இன்றியமையாதது. ஆரியத்தில் "அப்பிரதக் சித்தத்துவம்" என்பார். அடுத்த "திடர்விசும்பு" என்றாரம்பிக்கிற 7-ம் பாட்டின் மேல் இந்தத் தத்துவத்தை விளக்குவார்.

3-ம் பாசுரம்.

இலனது உடையனிது எனநினை வரியவன்
நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்
புலனொடு புலனலன் ஒழிவிலன் பரந்தஅந்
நலனுடை யொருவனை நணுகினம் நாமே.

அவதாரிகை:—தன்னைத்தவிர மற்றொரு வஸ்துவுக்கு ஒப்பில்லாத ஸ்வரூபகுண நித்திய விபூதியுள்ள எம்பெருமானுடைய ஜகத்து ஐசுவரியம் (லீலாவிபூதி) சொல்லுகிறது.

பொழிப்புரை:—பூமிதொட்டு ஆகாசம் அகப்பட உள்ள ஸமஸ்தவஸ்துக்களையும் ஐசுவரியமாகஉடையவனாய் அசேதநசூக்ஷ்ம ஆத்ம வஸ்துக்களிலும் அசேதநஸ்தூலவஸ்துக்களிலும் ஒன்றும் விடாதே ஸ்வசரீரரூபங்களாய் அமைந்து கலந்திருந்தாலும் அவற்றின் தோஷங்களால் தொடப்படாதவனாய் எல்லா வஸ்துக்களையும்விட விலக்ஷணனாயுமிருக்கும் எம்பெருமானை நாம்—ஆழ்வாரும் அவர் திருவுள்ளமும்—அடையப் பெற்றோம். அவன் வினைதீர்க்கும் திருவடிகளைத் தொழுது எழு என்று தம் திருவுள்ளத்திற்கு உரைக்கிறார். குறிப்புகள் (1) "பூமிதொட்டு ஆகாசம்

வரை'' கீழ்பாதாளலோகங்களுக்கும் மேல்பிரம்மலோகங்களுக்கும் உபலக்ஷணம் (2) ஐசுவரியம் என்றுல் ஜகத்தை நியமித்து நடத்தல்.

பதவுரை.

நிலனிடை - பூமியிலும் அதாவது பாதாளமுதல் எல்லா லோகங்களிலும், விசும்பிடை - மேல் ஆகாயத்திலும் இவற்றின் நடுவிலும், உருவினன் - உருக்களையுடையவன், உருவாகக் கொண்டிருக்கும் ஸ்தூலவஸ்துக்களையுடையவன் — அதாவது அசேதனம். அருவினன் - ரூபமில்லாத ஆத்ம வஸ்துக்கள், ஜீவாத்ம பரமானந்த சேதன வஸ்துக்களை உடையவன். 'இலனது - அது இலன்' என்று வியப்பது அது - அந்த வஸ்து தனக்கில்லாதவன். உடையன் இது - இது உடையன்-இந்த வஸ்துவைத் தனக்கு உடைத்தாயுள்ளவன், என நினைவு - இப்படி நினைத்தலுக்கு; அரியவன் - தகுந்தவன் என்று சொல்லக்கூடாதவன், அதாவது எல்லா வஸ்துக்களையும் ஒன்றும் விடாதே தனக்கே உரித்தாயுள்ளவன்.

உருவினன் முதல் எல்லா எழுவாய்களும் "ஒருவன்" என்கிற பதத்தோடு அந்வயம். புலனொடு-இந்திரியங்களால் அறியப்படும் வஸ்துக்களோடு (கலந்து நின்றுலும்); புலனலன் - அந்த வஸ்துக்களுடைய குணங்களோடு கலவாதவன். ஒழிவிலன்- நிகழ் எதிர் இறந்த காலத்திலும் அவைகளைவிட்டொழியாதவன். பரந்த - ஸர்வ வஸ்துக்களிலும் புகுந்து நடத்திவைக்கும். அந்நலனுடை-எல்லாவற்றையும் எக்காலத்திலும் ஈசனுய்க் கொண்டு நடத்தும் குணத்தையுடைய ஒருவன்; ஆசிரிய பூதனை ஒப்பில்லாத ஒருவனை, அணுகினம் - கிட்டி அநுபவிக்கப்பெற்றோம்.

நாம் - ஆழ்வார் தம் திருவுள்ளத்தைக் கூட்டிக்கொண்டு பேசுகிறபடி.

4-ம் பாசுரம்.

நாமவ னிவனுவன் அவளிவள் உவள்எவள்
தாமவ ரிவருவர் அதுவிது வுதுவெது
வீமவை யிவையுவை அவைநலம் தீங்கவை
ஆமவை யாவைஆய் நின்ற அவரே.

அவதாரிகை:- மேல்பாட்டுக்களிலே சங்கிரகமாய்ச் சொன்னதை இப்பாட்டு விஸ்தரிக்கிறது. முதல் பாட்டில் பகவானுடைய குண விக்கிரக விபூதியும், இரண்டாம் பாட்டில் அவன் சுவரூப விசித்திர இலட்சணமும், மூன்ரும் பாட்டில் லீலாவிபூதி யோகமும் சொன்னதில் சிலவற்றை இப்பாட்டு விவரித்துரைக்கிறது.

கருத்து:—ஜகத்தில் ஸகலவஸ்துக்களும் பகவத் அதீநம்.

பதவுரை.

நாம் - யாமென்ன. அவன் - தூரத்தில் இருக்கும் புருஷன், இவன் - சமீபத்திலிருக்கும் புருஷன், உவன் - அடுத்தும் தூரத்திலுமில்லாத நடுவில் உள்ளவன், அவள் - தூரத்திலிருப்பவள் - இவள் - சமீபத்துள்ளவள், உவள் - மத்தியிலுள்ளவள், எவள் - கூப்பிட்டுவா அறிந்துகொள்ளப்படுபவள். தாம் (பின் நசிக்கும்படியாயுள்ள என்று வருவதால் இப்பதத்திற்கு ஏற்றமாக அர்த்தம் கொள்ளுதல்சரியானதால்) வெகுமானிக்கப்பட்டவரும், அவரிவருவர் - அப்படி வெகுமானிக்கப்பட்டவர்களில் தூரஸ்தரும் மத்தியஸ்தரும் அடுத்துள்ளவரும். அது இது உது எது- ஆண் பெண் அல்லாத அடுத்துள்ளதும் தூரத்திலுள்ளதும் மத்தியத்திலுள்ளதும் விளித்து வருவதுமான வஸ்துக்கள். வீம் - (வீ - நாசம்) வீம் - நசிக்கும்படியான அடுத்த மத்தியஸ்த தூரவஸ்துக்களும், அவை-கீழ் சொன்னவஸ்துக்களுடைய, நலம்-குணங்களும், தீங்கவை - அவை தீங்கு என்று மாறி யங்வயிப்பது. அவைகளின் தோஷங்களும், ஆமவை-இனிமேலாகத் தக்கவைகளும், பின் வருமவைகளும். ஆயவை - ஆகிக் கழிந்தவைகளும், அவரே ஆய் - பகவான் தன்பிரகாரமாய். நின்ற அவரே - நிற்கிருர், அதாவது கலந்து சுவரூப நிர்வாஹகராய் நிற்கிருர். அதாவது மேல் செப்பிய பல பிரகாரமாயுள்ள பலவித ஸமஸ்தவஸ்துக்களுடைய ஸ்வரூபம் பகவானுடைய அதீநம். காண்கின்ற ஜகத் வஸ்துக்களின் ஸத்தை ஸ்வரூப பிரவர்த்தி அவனது அதீநமென்று உரைக்க வேண்டுமோ? முன்பாட்டிலே எல்லாம் சொல்லியாய் விட்டதே எனில், பகவானுக்கன்றி வெறொருவனுக்குப்பாத்தியமும் ஏதேனும் நியமன அதிகாரமும் உண்டோ என்று ஒருக்கால் நடையாடும் சங்கையைப் பரிஹரித்து நிற்பது இந்தப் பாட்டின் இலக்கு. மேற்பாட்டுகள் சுவாநுபவம் கூறுவதில் இந்தப்பிரமம் முதலானது கலக்கமயர்வற்ற ஆழ்வாருக்கு நிலயில்லையேஎன்ன அவர் பரமோபதேசம் செய்யத்திருவுள்ளம் பற்றியதைப்பற்றி வந்தது. பரமோபதேசமே தாத்பரியம். இரண்டாம் பாட்டு "மனனகம்" என்கிறதில் ஜகத் வஸ்துக்களுக்கும் பகவானுக்கும் அத்தியந்தம் பேதம் சொல்லியாயிருக்க,மூன்ரும் பாட்டில் அவைகளெல்லாம் அவன் நாங்களாய் ஒருவன் என்று ஓதுதல் முன்பாட்டில் சொன்ன பேதத்தைக் கலைக்குமோ என்ற சங்கை பரிஹாரமாய் இவைகளெல்லாம் அவனின்றி ஒன்றுமமையாததும் பரிக்கவொண்ணுததுமான விசேஷணங்களை உடையதென்றும் அவன் அதீநமென்றும் பிரமநிவர்த்திசெய்து விஸ்தரித்துக் கற்பிக்கின்றது.

5-ம் பாசுரம்.

அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி யடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

பொழிப்புரை:—வேதோக்த விதிவழிபாடுகளால் செய்யப்படும் கருமங்கள் அவரவர் மனதின் நோக்கப்படி வெவ்வேறு தேவதைகளின் உத்தேசியமா யிருந்தாலும் அக்கருமங்களின் சுவரூபங்கள் பகவத் அதீனமென்றும், அந்தந்தத் தேவதைகள் பலம் கொடுக்கத் தட்டில்லையாயினும் உண்மையில் அக்கருமங்கள் பகவானுடைய ஆராதநமாகிறது. அத்தேவதைகளில் அந்தர்யாமியாய் அவனிருப்பதே அதற்கு நியதி. அத்தேவதைகள் பிரீதி அடைந்து பலனைக்கொடுத்தாலும் அக்கருமத்தின் நிஜபோக்தா மேல்கண்ட காரணத்தால் அவனே என்கிருர்.

முன்பாட்டில் ஜகத்அதீநம் அவனுடையதென்ருயிற்று. இப்பாட்டில் ஜகத்தில் நடையாடும் காரியங்களெல்லாம் பல உத்தேசிய ரூபத்தாலே பிரவர்த்திக்கப் படுகிறபடியால் அந்தப்பலன்கள் அவனுலேவருவதால் ஜகத்ரக்ஷணம் அவனுடையது என்று சொல்லியதாயிற்று.

பதவுரை.

அவரவர் - அந்தந்த மனிதர்கள், தமதமது - தங்கள் தங்களுக்கு இலக்கான, அறிவறி - அந்த அந்த ஞானங்களுடைய, அவரவர் சத்துவ ரஜஸ் தமசு குணங்களால் ஏவப்பட்ட ஞானங்களுடைய, வகைவகை - வகைவகைகளாலே, அவரவர் -அந்த அந்தத் தேவர்களை, இறையவரென - பூஜிக்கப்படுகிறவர்களென்றும் பலம் கொடுக்கிறவர்களென்றும் நினைத்து, அடியடைவர்கள்-ஆச்ரயிப்பார்கள், அவரவரிறையவர் - அந்த அந்த ஈசுவரர்கள், குறைவிலர் - பலன் கொடுப்பதில் சக்தியில்லாதவர்கள் அல்லர், அவரவர்- அந்தத்தேவதைகள்,விதி வழி-சாஸ்திரங்களில் கூறியபடி, அடைய-ஆச்ரயிக்கும்படி, அதாவது ஆச்ரயித்து வேண்டும் பலனை யடையும்படி, இறையவர் - ஸர்வேசுவரன், நின்றனர் - அந்த அந்தத் தேவர்களில் அந்தர்யாமியாய் அவர்களுக்கு ஆத்மாவாய் நிற்கிருர்.

"விதிவழி" வேதங்கள் கூறியபடி பல தேவதைகளைப் பலபல உத்தேசங்களால் பற்பலர் ஆராதிக்கிருர்கள். அவ்வேதமே பகவானுக்கும் ஜீவனுக்கும் உடல்போல இத்தேவர்கள் நிற்கிருர்களென்று கூறியுள்ளது. சுருதியிலும்பகவத்கீதையிலும்ஸ்மிருதிகளிலும் கர்மங்களால் ஆராத்தியன் பகவானென்றும் அவனே கர்மங்களுக்குத் தேவர்களின் ஆத்மாவாய் நின்று பலன் கொடுக்கின்ருனென்றும் கூறப்பட்டிருக்கிறது. அர்ச்சுனன் தன் ஜயத்தின்பொருட்டுச் சிவபெருமானை அர்ச்சித்த மலர்களைக் கிருஷ்ணபகவான் திருவடிமலர்களில் பூஜை கழிந்தபின் கண்டு தெளிந்தான்.

அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திர உண்மை.

126வது பக்கத் தொடர்ச்சி.

அப்பர் சம்பந்தர் காலத்தில் காவிரியென்றும், பழங்காவிரியென்றும் இரண்டு நதிகளாய்க் காவிரியின் கிளைகள் காணலாயின. இவைகளன்றிக் கொள்ளிடம், அரசிலாறு என்பனவும் சிற்சில தலங்களைப் பாடும்போது தீர்த்த விசேஷங்காட்டுவதற்கோ,இயற்கை விநோதங்களை வர்ணிப்பதற்கோ தேவாரத்தில் மொழியப்பட்டிருக்கின்றன.

பன்னினூர் மறைபாடினூர் பாயசீர்ப் பழங்காவிரித்
தன்னுதண்டுறைமுன்னினூர் தூநெறி பெறுவாரெனச்
சென்னி திங்களைப் பொங்காக் கங்கையோடுடன் [சேர்த்தினூர்
மின்னு பொன்புரி நூலினூர் மேயது விளநகரதே.

இதனுல்காவிரிக்கு அணைபோட்டுப் புதுவழிதிருப்பிய கரிகால்வளவன் இமயமால்வரை சென்று தனது வெற்றியை நிலைநிறுத்தித் தன்னைப் பகைத்த மன்னர் தலைமீது பாறைகளை எடுத்துவந்த காலம் தேவாரத்திற்குப் பல நூற்ருண்டுகள் முன்னுதும். ஆயினும் அக்காலத்திய வடநாட்டு அரசனுகிய முகரியின் வஞ்சனை தமிழர் மனதில் பதிந்திருந்ததற்கு அத்தாட்சி அப்பர் தேவாரம்.

மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாண் முழுதமிவ் வுலகை யோடி
நள்வாயு தும்முடைய மம்ம ராணை
நடாத்துகின்றீர்க் கமையாதே யானேல் வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவே னும்மா
லாட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே.

இதுவே ஜயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணியிலும்,

தொழுது மன்னரே கரைசெய் பொன்னியில்
தொடர வந்திடா முகரி யைப்படத்
தெழுது கென்று கண்டிவை மிகைக்கணென்
றிங்க ழிக்கவே யங்கழிந்ததும்

ஆதலால், தேவார காலத்திற்குப் பல நூற்ருண்டுக்கு முன்னரே சைவனுன இவ்வளவன் சிவாலயங்கள் கட்டினுனென்றுல் தொகுதியிற் காட்டிய தொண்டர்கள், தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களோ அல்லது கபாடபுரத்தைச் சேர்ந்தவர்களோ என்பதை நிர்ணயிக்கக் கூடவில்லை. கபாடபுரத்தில் "பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" இருந்ததாகச் சிலப்பதிகாரத்தில் காண்கின்ருேம். அக்கோயில்களைப் பக்தராய்ப் பணிவார்,

நின்ருலு மிருந்தாலுங் கிடந்தாலு நடந்தாலு
மென்ருலுந் துயின்ருலும் விழித்தாலு மிமைத்தாலு
மன்ருடு மலர்ப்பாத மொருகாலு மறவாமை
குன்ருத வுணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்

என விளங்கினர். சேக்கிழார், பரமனையே பாடுவார் புராணத்தில்,

தென்றமிழும் வடகலையுந் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
வொன்றியமெய் யுணர்வோடு முள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன்புட்காணுப் பரமனையேபாடுவார் என்ருர்.

இதில் தென்றமிழ் என்றதைக் கடல்கொண்ட தென்றமிழ்நாடு என்றுகொள்ளுதலேபொருத்தமாகக் காணப்படுகின்றது. தமிழ்ப்புலவர்கள் தமது தேசத்தையே தென்தேசமென்ருர். ஏனெனில் தாமிருக்கும் தமிழ்நாட்டிற்குத் தெற்கு, தென்தேசமும், தமக்கு வடக்கேயிருக்கும்தேசம் வடதேசமுமாகும்.ஆதலால் கபாடபுரம் முதலிய தமிழ்நாட்டிலே பக்தராய்ப் பணிவார்கள்போல், பரமனையே பாடுவார்போல் அமைந்தவர் பூர்வத்தமிழ்ச்சைவர் என்றுகொள்ளல் சிறப்பாம். இதன்றியும் தமிழ்நாட்டுச் சித்தர்கள் வடநாட்டு இருடிகளுக்கு மேலாய் சிவஞானத்தில் முதிர்ந்து விளங்கினூர். அச்சித்தர்கள் காலம், தேவாரகாலத்திலேயே, இவ்வளவென்று கணக்கெடுக்கக்கூடாத நெடுநாளாயிருந்தது. சங்கத்தார் காலத்தில் சிற்சில சித்தர் இருப்பினும் சித்தர்காலம் சங்கங்களுக்கு முற்பட்டதாம். இவர் மகிமை தாயுமானவர் "சித்தர் கணமே" யெனச் சிறப்பித்துப் பாடிய பதிகங்களால் காண்க. சிலகாலம் சிவபூஜையிலும் மற்றைய காலம் வேறு தொழில்களிலும் மனதைச் செலுத்துவோர் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவரான சித்தர்கள் ஆகார். இவர்கள் இலக்கணம் சேக்கிழார் கூறுமாறு:-

காரண பங்கய மைந்தின்
கடவுளர் தம்பதங் கடந்து

பூரண மெய்ப்பரஞ் சோதி
பொலிந்தி லங்குநா தாந்தத்
தாரணை யாற்சிவத் தடைந்த
சித்தத் தார்தனி மன்று
ளாரண காரணக் கூத்தாடித்
தொண்டின் வழிய டைந்தார்

முப்பொழுதும் திருமேனி தீண்டுவார் தொகைத் தொண்டர்கள் பெரும்பாலும் அப்பர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடையே இருந்தவர். * அப்பர் காலத்திற்கு முன்னும் நித்தியபூஜை நடத்தும் சிவாச்சாரியர்கள் தில்லைவாழ் அந்தணர் முதலானோர் இருந்தபோதிலும் ஒவ்வொரு கோயிலுக்கும் பூசை நடத்த ஆதி சைவ பிராமணர்கள் அப்பர் காலத்திற்குப் பின்னரேஏற்படலாயினர். ‡சம்பந்தர் காலத்தில்திருப்பழுவூரில்அந்தணர்களான மலையாளர்களால் பூசைநடந்ததென் றறிகின்றோம். அவ்வழக்கத்தைத் திருவொற்றியூரில் நிலைநிறுத்தி யிருப்பதை யின்றும் காணலாம். திருஞானசம்பந்தர் மலையாள அந்தணரைச் சிறப்பித்துப் பாடியதாலேயே †மலையாள நம்பூரிகளைப் பலசிவாலயங்களிற் பூசைக்கு ஏற்படுத்தினர். நம்பூரி அந்தணர்களும் ஆதி சைவப்பிராமணர்களில் ஒரு மரபே.

ஆயினும் சேரநாட்டைச் சார்ந்தபின் தேசாசாரத்தாலும் பாஷை பேதத்தாலும் மாறுபாடுகள் அடைந்து, இவர்கள் சோழ பாண்டிய பட்டர்களுடன் கலக்கவில்லை. பரசுராமனுல் பூமிபெற்றது, சுந்தரர் தேவாரத்திற் காண்க:—

திருவானைக்காவல் சிலந்தி.

சிலந்தியு மானைக் காவிற் றிருநிழற் பந்தர் செய்து
உலந்தவ ணிறந்த போதே கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே!

என்று அப்பர் மொழிந்த செங்கண்வளவன், அப்பர் சம்பந்தருக்கு முற்பட்டவன். பாண்டியநாட்டில் கலிமயமாய் இருந்தகாலையில் சோழ நாட்டிலேயே சைவநெறி பரப்பியவர் இவர் கமலாதேவிக்கும் சுபதேவருக்கும் பிறந்தவரென்று பெரியபுராணத்தில் காண்கின்றோம். ஆனுல் திருவிளையாடற் புராணம், பாண்டிய பரம்பரையைக் காட்டுவதுபோல் சோழ பரம்பரையைக் காட்டும் நூல் அன்று. பெரியபுராணத்தால் சேக்கிழார் ஒருவாறு அக்குறையை நீக்கினும் அவருக்கே போதுமான சாசனங்கள் கிடைக்கவில்லை யென நம்பவேண்டியதா யிருக்கின்றது. ஒவ்வொரு சோழனைப்பற்றிக் கூறும்போதும் அநபாயன் பரம்பரை என்கிறுரேயொழிய அநபாயனுக்கும் அவ்வச் சோழர்களுக்கு முள்ள சம்பந்தம் நன்றாய் விளக்கிக் காட்டவில்லை. செங்கட்சோழன் காலநிர்ணயம் மிகவும் கடினமாயிருக்கின்றது. இவர் மூன்றும் நூற்றாண்டு என்று கொள்ளுவது உசிதம். சம்பந்தர் அவர் செய்த கோயிலைப்பற்றிப் புகழ்வதைக்காண்க.

மெய்யக மிளிரும்வெண் ணூலர் வேதியர்
மையகண் மலைக ளோடும் வைகிடம்
வையக மகிழ்தர வைகன் மேற்றிசைச்
செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே.

முற்றிற்று.

* (உ-ம்) புகழ்த்துணை நாயனுர்:—
அகத்தடிமை செய்யுமந் தணன்ரு
னரிசிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்தையு
நும்முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற் படியும்
வருமென்றொரு காசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்துகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே
சுந்தரர்.

‡ ஆக்கையாற் பயனென்—னரன்
கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென் னுதவிவ்
ஆக்கையாற் பயனென்.

† எண்ணுமொ ரெழுத்துமிசை யின்கிளவி தேர்வார்
கண்ணுமுத லாய கடவுட் கிடமதென்பர்
மண்ணின் மிசையாடி மலையாளர் தொழுதேத்திப்
பண்ணியொலி கொண்டு பயில்கின்ற பழுவூரே

அந்தர்களான மலையாள ரவரேத்தும்
பந்த மலிகின்ற பழுவூ ரனையாரச்
சந்தமிகுஞான மூணர்பந்த னுரைபேணி
வந்தவண மேத்துமவர் வான முடையாரே.

தமிழ்ப் பாடம் 110.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[132-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

உரிமையுடன் றம்பியரன் றுணர்வறியா
மையினவைக்க ணுரைத்த மாற்றம்
பரிபவமோ கேட்டோர்க்குப் பரிபவமென்
பதுபிறராற் பட்டா லன்றோ
கருதிலது மற்றெவர்க்கு மொவ்வாதோ
கண்மலரிற் கைப டாதோ
பொருதொழிலுங் கடைநிலத்திற் கிடந்ததே
யெனமொழிந்தான் புகழே பூண்பான். 15

துரியோதனன் செய்கையைக் குற்றமேயெனக் கொண்டு தண்டித்தலாகாதென்று தருமன் மொழிகின்றான்.

பதவுரை.

தம்பியர் - நமது தம்பியர்களாகிய துரியோதனுதியர், உரிமையுடன் - அந்தச் சுதந்தரத்தினுலும், உணர்வு அறியாமையின் - நல்ல அறிவு இல்லாததாலும், அன்று - அக்காலத்தில், அவைக்கண் - இராஜசபையில், உரைத்த - சொன்ன, மாற்றம் - வார்த்தைகள், கேட்டோர்க்கு - அதனைக் கேட்டவர்களாகிய நமக்கு, பரிபவமோ - அவமானமுண்டாக்குமோ!

பரிபவம் என்பது - அவமானம் என்பது, பிறரால்- அந்நியர்களால், பட்டால் அன்றோ - உண்டானுலன்றோ!

கருதில் - யோசிக்குமிடத்து, அது - (பிறரால் பட்டால் மாத்திரந்தான் அவமானம் உண்டாகும் என்னும்) அது, மற்று எவர்க்கும் - வேறு யாரிடத்திற் சொன்னுலும், ஒவ்வாதோ - அவர்களுக்குச் சம்மதமாகாதோ!

கண்மலரில் - மலர்போன்ற நமது கண்களில், கை- நமது கைவிரல், படாதோ - படுவதில்லையோ, (அதனுல் கையை வெட்டிவிடுகின்றோமோ!) பொருதொழிலும் - போர் செய்கின்றதென்னும் காரியமும், கடைநிலத்தில் - கொல்லையில், கிடந்ததே - போட்டுக் கிடப்பதற்குச் சமானமான தொன்றே!

என - என்று, புகழே பூண்பான் - புகழையே தனக்கு ஆபரணமாகஉடைய தருமன், மொழிந்தான்- கூறினுன்.

விரிவுரை:—தருமராசனது குணநலப் பெருமையின் அருமை மிகவும் ஆச்சரியமானது துரியோதனன் நாடு கொடாததற்குக் காரணம் மறதியேயன்றி வேறன்று எனக் கருதித் தமது நினைவை அவனுக்கு உரைக்கச்சொன்ன தன்மைக்கிணங்க, துரியோதனன் அன்று துரோபதையின் துகிலை உரிந்ததும் கொழுந்தியென்ற உறவின் உரிமையால் செய்ததாகவே தருமன் வீமனுக்கு எடுத்துக் காட்டுகின்றுன். "தம்பி, வீம, அயலாளொருத்தியைத் துரியோதனன் அவ்வாறு செய்தனனோ, பார். இல்லையே. ஆதலால் ஈதவன் செய்தது உரிமையால் என்றுணர்" என இயம்பி, உரிமையைக் காட்டுவதற் கேற்றமுறை துகிலைக் களைவது ஆகுமோ என்ற சந்தேகத்திற்கு, "தெரியாத்தனத்தால் இவ்வகையிலுரிமை கொண்டாடினுர்" எனச் சமாதானம்கூறினுன். "உரிமையிற் செய்தாலென்ன, பகையிற் செய்தாலென்ன; தெரிந்து செய்தாலென்ன; தெரியாமற் செய்தாலென்ன; நமக்கு இதனுல் விளைந்த அவமானத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டாவோ' எனப் பீமன் கேட்கலாம் என்று உத்தேசித்து, பிறரால் பட்டாலல்லது அவமானமில்லை என்பதை எடுத்துக்காட்டி, தான் மாத்திரமேயன்றி, எவருமே இதனை ஒப்புக்கொள்வார்களென்று விளக்குகின்றனன். "அப்படி ஒவ்வார், அவர் செய்த அவமானம் அவமானமே என்பாயாயின், அதற்காக அவர்களைத் தண்டிப்பது தகுதியோ? உடலின் ஒரு உறுப்பு மற்றொரு உறுப்பிற்குத் தீங்கு செய்துவிட்டதென்று துண்டித்துவிட்டால்,அதனுல் நஷ்டம் அதிகமே யன்றிக் குறைவில்லையே," என்று தொடர்ந்து, "எது எவ்வாறுயினும் சண்டை செய்வதனினும் இழிவான காரியம் வேறொன்றில்லை, அது கொல்லைப்புறக் குப்பையில் போடத் தகுந்ததே" என முடிக்கின்றுன் தருமன்.

முன் சூதுபோர்ச் சருக்கத்தில் திருதராட்டிரன், "உத்தமமாங் குலமயிலே என்சிறுவர் அறியாமல் உனக்குநேரே மைத்துனராம் முறையால் இவ்வழக்கலாதன செய்தார் மதியிலாமல்..." என்று துரோபதையிடம் வேண்டிக்கொண்டதை முற்றிலும் நம்பிய தருமன், இங்கு "உரிமையுடன் உணர்வறியாமையால்" அவ்வாறு செய்தனர் என்கின்றுன்.

"புகழே பூண்பான்" என்று தருமனை இங்குக் குறித்ததன் கருத்து நோக்கத் தகுந்தது. போரினுல் புகழ் செய்வார் மன்னர்குல வீரர் என்று எண்ணுவதிலும், பொறையின் பெருமையால் எய்தும் புகழே உயர்ந்ததென்பது கவியின் துணிவு.

சூடுகின்ற துழாய்முடியோன் சுரருடனே
முனிவர்களுஞ் சுருதி நான்குந்
தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு
பெறத்தூது செல்ல வேண்டா
வாடுகின்ற மடப்பாவை தன்வரமு
மென்வரமும் வழுவா வண்ணங்
கோடுகின்ற மொழியவன்பா லெனைத்தூது
விடுகவினிக் கொற்ற வேந்தே. 16.

தருமனது நியாயங்களை ஒப்புக்கொண்டவன் போல் பீமன் போலிவார்த்தைகள் பேசித் தன்னையே தூதுவிடச் சொல்கின்றுன்.

பதவுரை.

சூடுகின்ற - அணிவதற்கு உரிய, துழாய் - துளசியைத் தரித்த, முடியோன் - முடியை உடையவனுகிய கிருஷ்ணன், சுரர் உடனே - தேவர்களும், முனிவர்களும் - இருடிகளும், சுருதி நான்கும் - நான்கு வேதங்களும், தேடுகின்ற - இன்னும் தேடிக்கொண்டிருப்பினும் அகப்படாத, பதம் - அவனுடைய பாதங்கள், சிவப்ப - நடந்து சிவக்கும்படி, திருநாடு- அழகிய நாட்டினை, பெற - நாம் பெறும்வண்ணம், தூது செல்ல வேண்டா - தூதனுகப் போக வேண்டா —(நமக்காகக் கிருஷ்ணனைத் தூது ஏவுவது அழகன்று; ஆகையால்)

கொற்ற வேந்தே - வெற்றி பொருந்திய அரசே, வாடுகின்ற - சோர்வடைகின்ற, மடப்பாவைதன்— இளமைபொருந்திய பதுமைபோன்ற திரௌபதியின், வரமும் - சபதமும், என் வரமும் - என்னுடைய சபதமும், வழுவா வண்ணம்-தவருதபடி, எனை - என்னை, இனி - இனியாகிலும், கோடுகின்ற - மாறுகின்ற, மொழியவன்பால் - வார்த்தையையுடைய துரியோதனனிடத்தில், தூது விடுக - தூதனுக அனுப்பக்கடவாய்—(என்றனன் வீமன்)

விரிவுரை:—"சுருடனே முனிவர்களும் சுருதி நான்குந் தேடுகின்ற பதம்" என்று கண்ணனது பாதங்களைக் கூறுவதன் கருத்தினை, முன் நளவெண்பா, "மூலப் பழமறைக்கு முன்னேயுங் காணலாம்" என்ற செய்யுளையொட்டி (வால்யூம் 2, பக்கம் 3) விளக்கியிருக்கின்றோம். அடியார்க் கெளியனுய்த் தான் வந்து அருளினல்லது, புண்ணியம் தவம் அறிவு முதலிய சாதனங்களைக்கொண்டு அவன் பாதங்களை அடைவதனருமை இங்குக் கூறப்பட்டிருக்கின்றது.

இத்தகையதோர் பரம்பொருள், கால்கள் வருந்தத் தமக்காகத் தூதுசெல்லல் தகுதியன்று எனக் கூறுமளவும் வீமன் வஞ்சனையின்றியே பேசுவதுபோல் தோன்றினும், கிருஷ்ணனுக்குப் பதிலாய்த் தன்னைத் தூது அனுப்பும்படி வேண்டிக்கொள்வதில் அவனது நோக்கம் வெளிப்படுகின்றது. "கிருஷ்ணன் சென்று சந்துசெய்துவிடுவானுயின் எங்கள் சபதங்கள் பாழாகும்; ஆகையால் என்னையே அனுப்புதல் வேண்டும், அனுப்புவாயாயின், அவ்விடத்தில் நானொருவனுகவே துரியோதனன் முதலாயினேரைக் கொன்று சபதத்தை முடித்து வைக்கின்றேன். அல்லது சந்தொன்றும் நேராமல் தூதுபேசிப் பின் போரிற்கு வழிசெய்து

வருகின்றேன்" என்ற எண்ணத்தில் பேசுகின்றான் வீமன்.

மலைகண்ட தெனவென்கைம் மறத்தண்டின்
வலிகண்டு மகவான் மைந்தன்
சிலைகண்டு மிருவர்பொருந் திறல்கண்டு
மெமக்காகத் திருமா னின்ற
நிலைகண்டு மிவள்விரித்த குழல்கண்டு
மிமைப்பொழுதி னேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாம லவன்குடைக்கீ
ழுயிர்வாழக் குறிக்கின் றாயே. 17

குறைவற்ற திறலுடைய தாங்களும் தமக்குதவத் திருமாலு மிருக்குங்கால், அத்துரியோதனனுக்கு அஞ்சிச் சந்துசெய்யவேண்டுவ தேனென்று வீமன் வெகுள்கின்றான்.

பதவுரை.

மலைகண்டது என - மலைக்கு நிகரான, என்-எனது, கை - கையிலுள்ள, மறம் - போர்க்குரிய, தண்டின் - கதையினது, வலி - வலிமையை, கண்டும் - பார்த்திருந்தும்; மகவான் - இந்திரனது, மைந்தன் - புத்திரனாகிய அர்ச்சுனனது, சிலை - காண்டீபம் என்னும் வில்லினது திறமையை, கண்டும் - பார்த்திருந்தும்; இருவர் - நகுலனும் சகாதேவனும் ஆகிய மற்ற இருவரும், பொரும் - போர்செய்யும், திறல் - வல்லமையை, கண்டும் - கண்டிருந்தும், எமக்கு ஆக - நமக்காக, நெடுமால் - திருமாலாகிய கிருஷ்ணனே, நின்ற - உதவி செய்ய நிற்கின்ற, நிலை - உறுதி நிலையை, கண்டும் - பார்த்திருந்தும்; இவள் - இந்தத் திரௌபதி, விரித்த-(பழிவாங்கமாட்டீர்களோஎன்று) விரித்திருக்கின்ற, குழல் - கூந்தலை, கண்டும் - கண்களால் பார்த்திருந்தும்,

நேரார் தம்மை - நமது பகைவர்களை, இமைப்பொழுதில் - கண்மூடித் திறப்பதற்குமுன், கொலை கண்டு - நாம் கொல்லக் கண்டு, மகிழாமல் - மகிழ்வதற்குப்பதிலாய், அவன் - அந்தத் துரியோதனனது, குடைக்கீழ் - ஆட்சிக்குக் கீழ்ப்பட்டு, உயிர் வாழ - (அவன் கொடுக்கும் ஐந்து ஊரையும் வீட்டையும் பெற்று) வாழ்நாள் கழிக்க, குறிக்கின்றாயே - ஏன் நினைக்கின்றாயோ! (தெரியவில்லையே, என்றனன் வீமன்).

குறிப்பு:—கண்டு, என்ற சொல் ஒரே பொருளில் பன்முறை இச்செய்யுளில் வருவது, சொற்பொருட் பின்வரு நிலையணி ஆம்.

கை + மறம் = கைம்மறம், என மகரம் மிகுந்து புணர்ந்தது. நிலைமொழி ஐ என்னும் உயிரேனும், அல்லது அந்த உயிரோடு கூடிய உயிர்மெய்யெழுத்தேனும் ஓரெழுத்தொருமொழியா யிருக்க, வருமொழிமுதலில் ஞ ம ந, என்ற மெல்லின மெய்களில் ஒன்று வருமாயின், அம்மெய் மிகுந்து புணரும் என்று முன் (3-வது வால்யூம், 91-வது பக்கம்)காட்டிய விதிக்கு இணங்க, கை + மறம் = கைம்மறம் என்றாயிற்று.

இலக்கணம்.

III. D. புணரிலக்கணம் கற்பதற்கு எளியதாகும்படி நிலைமொழிஈற்றையும் வருமொழிமுதலையும் நோக்கி நாம் பிரித்துக்கொண்ட வகைகளில், நிலைமொழியிறுதியில் உயிர் வர வருமொழிமுதலில் வல்லினமெய் வருகின்ற புணர்ச்சிக்குரிய விதிகளை இனி, கற்போம். இவை, காடி + குட்டி = காடிக் குட்டி என அவ்வல்லினமெய் சிலபோது மிகுந்தும், காடி + கடித்தது = காடி கடித்தது எனச் சிலபோது மிகாமலும் புணரும். எப்பொழுது மிகும், எப்பொழுது மிகாது என்பதை, நிலைமொழியும் வருமொழியும் என்ன பொருளில் தொடர்கின்றன என்ற தொடரிலக்கணத்தைக் கொண்டே தெரிந்துகொள்ளவேண்டும். தொடர் மாத்திரம் அல்லாமல், நிலைமொழியின் தன்மையும், அதன் ஈற்றிலிருக்கும் உயிரும், சிற்சிலபோது வருமொழிமுதலில் இருக்கும் வல்லினமெய் மிகுவதற்கும் மிகாததற்கும் காரணமாயிருக்கும். ஆதலின், நாம் இதுகாறும் ஓதியிருக்கின்ற சொல்லிலக்கணம் தொடரிலக்கணம் முதலியவைகளை நமது வாசகர்கள் இப்பொழுது பின்னு மோர்முறை படித்து நன்கு தேர்ந்துகொள்ள வேண்டுமென்று விழைகின்றோம்.

இலஞ்சிப் பாவை.

6. இராதாகிருஷ்ணன் வருகை.

136-வதுபக்கத் தொடர்ச்சி.

வனமே மேவிப் புகுவோமென்று மாதுல னுரைத்த மாற்ற மிவைகேட்ட இராதாகிருஷ்ணன் மனந் தாளானாய் எழுந்து நின்று "அச் சொற் புகலேல்! எனது வாள், உறையில் உள்ளவரை, ஒரு நாளும் அதற்கு யான் ஒருப்படேன். இடருற்ற காலையில் வீரங்குன்றி எமதில்லம் விட்டேகுமினென்று நுமக்கியா னுரைப்பேனேல் எனது நாடும் செல்வமும் மாற்றார் கொள்ளக் கடவர். எனது புகழ் மண் கொள்ளட்டும். அதுகிடக்க, புனைந்துரைக்கும் ஆற்றல் பெறாத போர்வீரனாகிய யான் புகலு முண்மை மொழிகளைச் சற்றே உள்ளங்கொண்டருளுங்கள். இச்சுதஞ்சனைச் செல்வியை யென்னில்லக் கிழத்தியா யளித்து, எமதுடனமர்ந்து உமது நல்லறிவின் முதிர்பயனை யெமக்களித் துதவுவீராயின், மாம்பழுத்த விடத்து வந்து கூடும் வெளவால்களெனப் பலவீரர் நமதுறவை வெளவுவர். மன்னனிடத்துள்ள வெறுப்பால் வருவர் பலர்; முன்னந் துணைவரை யிழந்த துயரால் துன்னுவர் சிலர்; நம்மை யொப்பவர் பலர் அடவிக் கவர்களைத் துரத்திய கொடுங்கோன்மையின் பயனெனக் கூடுவர். காடிதனில் கடிமுரசம் கரைப்பக் கரைவர் மன்னனவையிலுள்ள மதிவல்லோரும் மற்றவரும். வாயில் காப்போரனைவரும் விதிர்விதிர்த் தேங்குவர். எனது மணவறைக் கேற்றிய விளக்குகளென்னச் சிற்றார் பல தீப்பற்றி யெரிபந்தங்களாய்ச் சுடருங்கால் மன்னனது உறக்கமும் அமைதியு மொருங்கே கெடும்—ஏனம்மா! நீங்களெனக்குச் சமிக்கைகள் செய்யவேண்டிய தில்லையே! ஓ, சுதஞ்சனை! நீ யுள்ள முட்கி வெருள வேண்டா! நான் சொன்னவற்றையெல்லாஞ் செய்துவிடப் போகிறேனா? இல்லையில்லை! நிரை கவர்தலும் போர்புரிதலும் மாதுலன் நன் மதியினால் நீங்கும். மலைநாட்டு வீரரெவரும் மனதிற்புகையும் பகையும் பொல்லாங்கும் நீங்கப்பெற்று, நலமிகு நட்புடனே நம்மோடு கூடிக் கணவாய்களையும் கவர்வழிகளையும் காத்துநிற்பரேல், நமதிருக்கையையெய்தும்வகை காணா மன்னன் அவமே தன்னூ ரடைவான்" என்றான்.

உறக்கத்திற் சிலர் உறங்கியவாறே நடந்து செல்வதுண்டு. அன்னார் மேருமலையெனக் குரைகடல் கவிந்த கோபுரமொன்றின் மீதேறி யுறங்கிப் போதுபுலர்ந்த பின்னர் நன்னினைவு கொண்டு நோக்கிடின், அள்ளலெனத் தாழ்ந்த பள்ளங் கண்டும், நாமநீர் வேலையின் முழக்கங் கேட்டும் நடுங்கி மதிமயங்கித் தமது விளிவினை முந்துறத் தாமே விழுந்தடைய விழைதல்போல் சுதஞ்சனையும் தனது தந்தை யுய்யும்வகை யறியாளாய்ப் புன்றொழிலோன் புகன்ற மொழிப்படியே கடிமணம் புகுவதே தனக்குற்ற முடிவாமோ என ஐயுற்றாள். பன்முறை போய்ப் போய்க் கரைகாணா தெறி கடல்வாய் மீண்டேகி வங்கத்தின் கூம்பேற நினையும் புறவமெனத் தயங்குமவள் நோக்கறிந்து, மால்வண்ணனுந் தன்னெண்ணத்தை வெளியிடுவான் எழுந்து நிற்க, அதற்குள் மடவரலிவள் வேறுபடு மனநிலையின்னதென முகக்குறிப்பாலுணர்ந்த ஸ்ரீபாலன், அவனைக் கையமர்த்தித் தானே இராதாகிருஷ்ணனுக்கு விடைகளை விரைந்துரைத்தான். "இராதாகிருஷ்ணா! போதும், போதும்! எனது பெண் ணுனது மணாட்டி யாகாள். அவள் முகஞ்சிவந்தது நாணத்தாலன்று; வெளுத்ததும் மங்கையர்க்குரிய அச்சத்தாலன்று; மாதிவ ளிதயங் கன்றாவண்ணங் காக்கக் கடவேன் யான். மன்றல் விழைந்தில ளென் னருமைப் புதல்வி யாதலால் நீ அவளைப் பொறுத்திடுக. எமக்காக நீ யாதொரு தீங்கிற்கும் உள்ளாக வேண்டுவதில்லை. தனது அரசனுக்கெதிரே ஸ்ரீபாலன் தன் னுடைவாளுருவி நில்லான். மன்னனுக்கு இளமையிற் கோல் சுழற்றவும், கடிவாளம்பிடிக்கவும் கற்பித்தவன் நானே! அப்போதிருந்த அவனுருவம் இன்னும் என் கண் முன் நிற்கின்றது. சுதஞ்சனை இவளால் யானடையும் மகிழ்ச்சியினும் பன்மடங்கு யான் அரசன் காரணமாயடைந்திருந்தேன். அந்தோ! அவை யாவும் அவலமாயின. இன்னும், எனது இடர்ப்பாடுகளையும் பொருட்படுத்தாமல் நா னவனிடம் அன்பே கொண்டுள்ளேன். என்னை யவன் வருத்துவதெல்லாம், அருகிருப்பார் எற்பகைத்துப் புறங்கூறும் அவதூறுகளை நம்பியே யாதலால், அவனிடம் நான் சினங்கொள்வதேலாது. என்னை விடுத்து நீ தனியே சென்று உன் பொறுப்பிலேயே அவனருளை இரப்பதனில் நலமுளது."

இதைக் கேட்ட இராதாகிருஷ்ணன் இருமுறையவ் வறையில் முன்னும் பின்னுமா யுலவினான். தன் முடியிலணிந்திருந்த சிறகுகள், தீவர்த்தியின் திமிரமுறு ஒளியினிற் பேயென அலைய, அவனது உருவம் இரவிற் செல்லும் வழிப்போக்கன் போன்றிருந்தது. அவனது முகத்தில் வெட்க மொருபுறமும், சீற்ற மொருபுறமும் தெரிந்து நின்றன. ஒருதலைக்காதலாய் முடிந்த அவனது அன்பின் பெருக்கம், அம்பெனமாறி அவனதுள்ளந் தைத்தது. பெண்ணொருத்தி தன்னைப் புறக்கணிக்கவும், அதை அயலானொருவன் காணவும் நேரிட்ட வினையினை நொந்தும், தன் னிளமைமுதல் தான் வளர்த்தவொரு கருத்துநொடிப்பொழுதில் அவலமானதை நினைந்தும் வெம்பினான் வீரன். இறுதியில் மாமனது கையைப் பற்றி மனங்குழம்பி விம்மலுற்றான். வாய்விட் டரற்றல் ஆண்மகனுக்கேற்ற தன்றென மனதிற்கொண்டானேனும் உற்றதோர் கொடுந்துய ருழக்கக் குமுறிக்குமுறி யழுதான் குவலயத்தி லெதற்குமஞ்சா இவ்வீரதீரன். ஓசையற்றவவ் வறையில் அவனது நெட்டுயிர்ப்பும் விம்மலும் விரவின. அவனது அருந்துயரையும் தன தந்தையின் தனித்துயரையுங் கண்ட சுதஞ்சனை மனம்பொறா தலமந்து அவ்வறையை விட்டு நீங்கவெண்ணித் தன்னிருப்பிடம் பெயர்ந்தெழுந்தனள். உடனே, பிறனொருவன் செல்லலுறக் கண்டும் அவ்விடமிருப்பது அழகன்றென் றெண்ணியும் சுதஞ்சனைக்குத் துணையாக வெளியேக நினைத்து மவளுட னெழுந்தனன் மால்வண்ணனும். இச்செயலைக்கண்ட இராதாகிருஷ்ணனுக்குச் சினமாறும் வழியொன்று சிந்தையிலுற்றது.

சில அரும்பதங்களின் பொருள்:—கரைப்ப - ஒலிக்க. கரைவர் - உருகுவார். கவர்வழி - பிளவுபட்டவழி. அள்ளல்- பாதாளத்திலுள்ள நரகம். நாமநீர்வேலை - அச்சத்தைத் தருகின்ற நீருடையகடல். விளிவு - மரணம். வங்கம் - கப்பல். கூம்பு-பாய்மரம். மன்றல் - கலியாணம். திமிரம் - இருண்ட நிழல். குவலயம் - பூமி. செல்லல் - துயரம்.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனு மாய—கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார் போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தர கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு)

மானேஜர்:—"கலா நிலயம்", 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

அறமது முதல்சார் பெனவிரு வகைத்தே.

அசைவிலாவொரு அறத்தின துயர்வினை யுய்த்துத் தம் முள்ளமாரத் துய்த்த மேலோர், பொருளெனும் படுகுழியி லதனைப் படுப்பதற்காற்றாது கௌடில்யசாஸ்திரத்தைப் பிரமாணமாகக் கொள்ளும் மன்னவர்தம் அரசுநெறி முறையைக் கடிந்தும் கைவிட்டும் பேசிய பான்மையைக் கருதுங்கால், முதலறமென்றும் சார்பறமென்றும் இருவகையறங்க ளிருக்கு முண்மை எய்தவருகின்றது. காலதேசவர்த்தமானங்களுக்குக் கட்டுப்படாததாய், கருமமொன்றிற் குரிய கருவியென நிற்ற லின்றி, ஊழி பெயரினும் ஓரிழைபெயராத் திண்மையுடன், தன்னால் வரும்பயன் தானேயாகி, ஆள்வோர்க்கும் அடிமைக்கும், துறவோர்க்கும் இறைவர்க்கும், யாவர்க்கும் ஒன்றேயாய், அன்றும் இன்றும் என்றும் மாறாப் பெருமை மருவிய முதலறத்தின் தூய்மையே தஞ்சமெனத் தாழுஞ் சில ருள்ளம். முதலெழுத்தினின்று முற்றிலும் வேறுபடுவதில்லையாயினும், பிறக்கு முறையும் நிற்குமிடமு நோக்கித் தன் னளவிறந்துங் குறைந்து மொலிக்கின்ற சார்பெழுத் தனையதாய், நிலைக்களம் நிகழ்காலம் முதலிய புறச்செய்திகளைச் சார்ந்து வரும் சார்பறங்களைப் பற்றி ஒழுகுதலே வாழ்க்கைக் கடனெனக் கொள்வார் சிலர். அந்தண ரறமென்றும் அரச ரறமென்றும் வணிக ரறமென்றும், இல்லறமென்றுந் துறவறமென்றுந் தனித்தனி இயங்குமறங்கள், முதலற மளபெடுத்தும் அஃகியும் நடப்பனவாகும். எழுத்திலக்கணத்திற்கும் அறத்தின திலக்கணத்திற்கு முள்ள இயைபு இதனுடன் நிற்றல் வேண்டும். முதலெழுத் தொன்றிரண்டு பயில்வதோடு, சார்பெழுத்தின் மிகுதிகொண்டே வாக்கியம் நடப்பதுமல்லாமல், முதலெழுத்துமட்டுமே மொழியின தமைப்பிற்குப் போதாது என்னுமிது திண்ணம். மற்று இவ்விதமே, முதலற மொன்றுபற்றி வாழ்க்கை நடத்துதற்குப் பற்றுமோ, அஃதின்றி யமையாதோ, வாழ்க்கையின் செம்மைதான் சார்பறத்தின் செல்வாக்கே யன்றோ என்னுமிவ் வெண்ணங்கள் ஐயத்திற் கிடமற்றன வாகா. சார்பறத்தின் இலக்கணத்தின்படி வீடுமன் வகுத்த இராஜதர்மம் பிழையற்று நிற்கின்றது. உலகங்களில் வலியோர்புக் கெளியோரை நலியாவண்ணம் நான்முகன் கற்பித்த தண்டநீதியிற் கண்டுள முறைகளை நடத்துவதாலல்லால் உய்யும் வழி இல்லை யென்றான் வீடுமன். முதலறத்தொடு முரண்படினும் இச்சார்பறத்தைத் தாங்குதலே தக்கதெனப் போதித்த வீடுமன்தன் விதியினின்று மனு முதல் மற்றையோரும் மாறுபட்டிலர். விதிகள் மட்டுமேயன்றி அவைகளைச் செய்கையில் செலுத்துதற்குரிய சூழ்ச்சிகளும் சொல்லிய வீடுமன்பாடத்தையே கௌடில்யன் பலபடி பெருக்கிவிட்டான். இதற்கு வெகுண்டனர் காதம்பரி இயற்றிய பாணகவி. வில்லியும் வேறு விளம்பினர். இதற்கெதி ருரைத்தனர் தோலாமொழித் தேவர். இராஜதர்மம் என்னு மப்பொருள்நூல், தனுதாயமுறையென (Political economy) வேற்றுருவங்கொண்டு வழங்கு மிக்காலக் கொடுமையை ஜான் ரஸ்கின் தக்கவாறு தகைந்தனர்.

128வது பக்கத் தொடர்ச்சி.

சூழ்ச்சிகள் செய்வதற்கும் கைதவங்களைப் பயில்வதற்கும் உள்ள வேற்றுமை அதிகமும் பெரியதன்று. அறமே முன்னின்று அனைவரையுந் தக்கபடி காத்தற் கியலுமென்னும் நம்பிக்கையில் மாறுபட்டுங் கொண்டாலன்றி மாந்தர், தம்முடைய சூழ்ச்சிகளை அதற்குத் துணையாய்ப் புகுத்தவேண்டுமென நினைக்கமாட்டார். கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றமுடையது அறமாதலின், அதன் ஆட்சிக்கு அடங்கியிருத்தல் ஒன்றே கடன். ஆதலின், அறமே தனதொரு அசைவிலாத் தன்மையால் மக்களைக் காக்கவேண்டு மென்ற பான்மைபோக்கி மக்கள் தாம் முயன்று அறத்தினைக் காக்கப் புகுவது முறை பிறழ்ந்த மடமையெனச் சிலர் மதிப்பதும் தக்கதே. தன்னுடைய புணர்ப்பினால் அறத்தை நிலைநிறுத்த வேண்டுமென்னும் எண்ணமுடையோர், இத்திறத்தில் செய்யும் உதவிகளிற் சில, வீடுமன் வெள்ளையாய் விளம்பிய வண்ணம், "கபடமாயிருப்பதும், ஈனகாரியங்கள் செய்வதும்" இன்றியமையாதனவே யாகின்றன. "இராஜாக்களிடத்தில் தர்மம் அதர்மம் இரண்டுந்தா னிருக்கும்" என்று தயங்காமற் சொல்லவேண்டி நேர்கின்றது. குணநாடிக் குற்றமுநாடி அவற்றுள் மிகைநாடிக் கொள்கின்ற கொள்கை தன்வரையில்குற்றமற்றதாயினும், செவ்வியின் அளக்கத் தெரியாதவர்களாலும், தம்முடைய விருப்புவெறுப்பிற் கிணங்கி ஓரஞ்சார்ந் தளப்பவர்களாலும், கையாளப் பெறும்போது இக்கொள்கையின் பெயரால் கொடுமை பல நிகழாமல் காக்கலாவ தெங்ஙனம்!

பொருட்பால் வகுத்த வள்ளுவநாயனாரும், தயரதனது மந்திரிகளின் தன்மையுங் குணமுங் கூறிய வான்மீகி முனிவரும் இராஜதர்மம் என்னுமிச் சார்பறத்தின்பால் தம் சிந்தையைச் செலுத்தி யிருக்கின்றனர். அவைகளில், இங்கு ஆராய்ந்து வருகின்ற விடயத்திற் குரியதாய் உதவவல்ல சில பாகங்கள் முன்னமே இவ் விதழ்களில் பெயர்த்தெழுதப் பெற்றிருக்கின்றன. இதனின்று, வியாதர் முதலானோர் விரிவாக உரைத்திருக்கும் அர்த்த சாஸ்திரத்தை மனதிற்கொண்டே இவ்விருவரும் இவை வரைந்திருக்கின்றனர் என்பது வெளிப்படை. இனி, கம்பருக்குப் பண்டைய சாஸ்திரங்களின் பொருள்களெல்லாம் தெரிந்திருக்கு மென்பது மாத்திரமன்றி, அவைகளைத் தழுவிவரைந்த வான்மீகியின் உரையையும் வள்ளுவர் உரையையும் நம்கவிக்கரசு நன்கு ஓதி அதனைக் கருத்தில் நிறுத்திக் கொண்டே பேசுகின்றார் என்பதும் வாசக அமைப்பிற் சிலவற்றை ஒப்புநோக்குங்கால் தெரியவரும். எனின், அவ்வுரைகளுங் கருத்துக்களும் சென்று இக்கம்பரது மனத்தின்வழி வருங்கால் மாறுமொரு இரஸவாத வித்தையைக் காணக்காணக் கற்றோர் மகிழ்வு கரையில தாகும். தான் தொட்டதெல்லாம் பொன்னாகவேண்டுமென மைடாஸ் என்பானொருவன் வரம் பெற்றானென மேனாட்டுக்கதையொன்று கூறும். அன்னதோர் வரமே பெற்றிருக்கின்றன ராதலால் கம்பர் வரகவி என்னலாயினர். எனினும், தீண்டியவுணவும் பொன்னாயதால் வாடிய பசியால் மைடாஸ் வருந்தினன் என்பர். தானே அனுபவிக்கவேண்டுமெனும் ஆசைக்குரிய பொன்னே அவன் வேண்டியதாதலால் அக்கொடுமை நிகழ்ந்தது. மற்று இக்கவிவரர் மற்றவர் இன்புறற்குரிய தங்கம் செய்து வழங்கினாராதலின் குறைவறப் பெருகும் மேன்மையராயினர்.

ஆச்சரிய சூடாமணி

முன்னுரை.

'ஆச்சரிய சூடாமணி' என்ற காரணப்பெயர் புனைந்த இந்நூல் வடமொழியிலுள்ள சிறந்த நாடக நூற்களிலொன்று இது ஏழு அங்கங்களை யுடையது. இதைச் சக்திபத்ரன் என்ற வடமொழிப் பெரும் புலவர் இயற்றினர். இதில் கூறப்படும் கதை இராமாயணக் கதையேயன்றி மற்றன்று.

"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்"

என்றபடி, ஆசிரியர் முதநூற் கதையை நாடகத்திற் கியைய வேண்டுமிடங்களில் இடையிடையே மாற்றிக் கொண்டதுமன்றிக் கதைப்போக்கைத் தொடர்பு பற்றி நாடகபாத்திரர்கள் வாயிலாகச் சுருக்கிக்கூறிச் சுவைபயக்கக் கற்பனை செய்திருக்கின்றார். அது வியக்கத் தக்கதென்பது படிக்குங்கால் நன்கு விளங்கும்.

இவ் வடமொழி நாடக சம்பாஷணையெல்லாம் பெரும்பாலும் செய்யுட்களாலும் திட்பநுட்பமான தெள்ளிய வசன நடையிலும் அமைக்கப்பட்டிருப்பதால், முதல்நூலை ஒது மின்பத்தினளவு மொழிபெயர்ப்பில் பெறுவதருமை. இந்நூலாசிரியர் வரலாறும் நூற்பெயர் காரணமும் கதை மாற்றமும் பிறவும் இம் மொழிபெயர்ப்பு முற்றியபிறகு இறுதியில் யான் வரைய நினைத்திருக்கும் ஆராய்ச்சியில் விரிவாகக் காணலாம்.

R முத்தையர், தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீமந்திரமூர்த்தி உயர்தரப் பாடசாலை
திருநெல்வேலி.

பர்ணசாலை அங்கமென்ற முதலங்கம்.

சூத்திரதாரன் வாழ்த்துக் கூறுகின்றான்.

நீனிறக் கல்லாந் திண்புயத் திரையு
நித்திலத் தொடையலா நுரையு
நானிலந் தாங்கும் பணிமணி யொளியா
னற்செந்தீ நிறத்தையும் பெற்றுப்
பானிறச் சங்க மேந்திச் சராசரம்
படுத்துப்பே ரொளிப்பிழம் பாகித்
தானறி துயிலுங் கடலிடைக் கடல்போற்
றனுவுடைக் கையன்காத் திடவே.

மரகதக் கல்போல வலியுடையொருவன் தோள்களாகிய பல அலைகளும், முத்துமாலைகளாகிய நுரைகளும் பொருந்தி, ஆதிசேடனது சூடிகைமணி விளக்கத்தால் செந்நிறமும் பெற்று, சங்கைத் தாங்கிச் சராசரங்களை யுட்கொண்டு என்றும் குறையாத ஒளித்திரளாய்ச் சமுத்திரம்போல் கடல் நடுவில் கண்வளர்கின்ற சாரங்கபாணி நம்மைக் காக்க.

[சுற்றி நடந்து அரங்கினைப் பார்த்து]

நங்காய் இங்கு வா!

நடி:—(வந்து) ஐய! இதோ வந்தேன்.

சூ:—மங்கையே! ஆசிரியர் கட்டளைப்படி மனிதரனைவரும் களிப்படையுமாறு யான் ஏற்றிருக்கும் இச்சுமை மிகப்பெரிதே; ஆயினும் பரதர் முதலியோர் பண்டு பொறுத்த இப்பெரும் பாரத்தை இன்று யான் பற்பலர் துணையினால் அரசனைப்போல் தாங்குகின்றேன்.

நடி:—பெரியதோர் நாடகப்பொறுப்பைத் தாங்கிக் கொண்டிருக்கின்றீரென்பதைத் தங்களுடைய தோற்றமே காட்டுகின்றதே.

சூ:—சுந்தரீ, சிறப்பான வழியிற் செல்வது எல்லோர்க்கும் எளிதன்று.

நடி:—அச்சிறப்பு யாதென்றே யான் கேட்கின்றேன்.

சூ:—பெண்மணி, மேன்மைதங்கிய இச்சபையோர் தென்னாட்டிலிருந்து வந்த ஆச்சரிய சூடாமணி என்ற அறிய நாடகத்தின் சுவையை இருமடங்காக்கி நுகரவேண்டி அந்நாடகத்தை நடித்துக்காட்ட நமக்குக் கட்டளை கொடுத்திருக்கின்றார்கள்.

நடி:—'தென்னாட்டிலிருந்து வந்த நாடகம்' என்று சொல்வது பொருத்த மற்றதே. அப்படியானால், வானமும் மலரரும்பும்; மணலும் எண்ணை சுரக்கும்-சந்தேகமில்லை.

சூ:—தேன் மொழியாய்! அப்படி நினையாதே; உன் மார்பினைக் குளிர்விக்கச் செழுங் களபக்குழம்பும், அலங்கரித்துத் துயல்வரு முத்துமாலையுமெங்கிருந்து போந்தன? ஆதலால் பிறப்பிடத்தைப் பார்ப்பது அழகன்று; குணத்தைக் கைக்கொண்டு பார்.

நடி:—(தன்னையே பார்த்துக்கொண்டு) சரிதான்; மேன்மையான பொருள்கள் அங்கிருந்து வருவது உண்மையே; கவிதையில் மறைந்து தனது அறிவுக் கிரணங்களைப் பல நாடுகளிலும் அவிர்தரச் செண்ணிய அப் புலவன் யார்?

சூ:—மாதே, "உன்மாத வாசவதத்தை', முதலிய அரிய காப்பியங்க ளியற்றிய சக்திபத்ரனே இந்நாடகத்தையும் வரைந்துள்ளான்; ஆதலால் நீ உட்சென்று நாடக பாத்திரங்களை அழகுபெற அமையுமாறு செய்; நான் இதைச் சபையோர்க்கு அறிவிக்கின்றேன். என்ன! நான் பேச நினைக்கின்ற பொழுதே ஓர் ஓசை கேட்கின்றதே! ஆகட்டும்; பார்ப்போம். (அரங்கினுள் நாணொலி செய்தல்) — அறிந்தேன்; சீதையுடன் வனவாசஞ் செய்யவந்த இராமனுக்கு இவ்வடவில் உறைவிடம் சமைக்கலுற்ற இலக்குமணன் தன் வில்லின் நாணொலியால் கொடிய மிருகக்கூட்டங்களை ஓட்டுகின்றான்.

[அம்பும் வில்லும் எடுத்துக்கொண்டு
இலக்குமணன் வருதல்]

இலக்குமணன்:—

நாண்டெறி யொலியா லிங்கு நயனிலா விலங்க கற்றி
யாண்டிலைச்சாலைவேய்ந்தே யலர்களாற்கிடக்கையாக்கி
நீண்டிடு சூர றன்னை னேர்மையா யிருக்கை பின்னி
மாண்டகு மலர்நீர்த் தாதால் மலர்முற்றந் தெளிக்கின்
[றேனே.

வில்லின் நாணொலியினால் நாணிப் பக்கங்களிலுள்ள கொடிய மிருகக்கூட்டங்களை ஓட்டுகின்றேன். அவ்விடத்தில் பர்ணசாலை கட்டுகிறேன். அதனுள் மலர்களாற் படுக்கையும் பிரம்பினால் இருக்கையும் செய்

கின்றேன். பிறகு தாமரைத் தாதுகலந்த நீர்த்திவலைகளால் முற்றந் தெளிக்கின்றேன். (இவ்வாறு செய்து) இப்படி ஒருவாறு இராமன் கட்டளையை இயற்றி முடித்தேன். 'துன்புற்றவர் நிலைமை அறிவைக் கொடுக்கும் என்பதுண்மை. இனிமேல் பர்ணசாலை செய்து முடித்தவிச் செய்தியைக் கோதாவரி நதிக்கரையில் அலைகளிற் றோய்ந்துவரும் குளிர்க்காற்றால் மனைவியுடன் வழிநடந்த இளைப் பாறிக்கொண்டிருக்கும் தமையனிடம் சென்று தெரிவிப்போம். (சுற்றி நடந்து பார்த்து) ஆ! ஆச்சரியம்; இதோ காணப்படுகின்ற பெண்ணுருவம் காட்டிற்கு இயைந்ததாக வில்லை!

பூவிற்குக் கலன தாயென் புரந்தர னுலகி லாருந்
தேவிற்கே யணிய தாயென் சீரிலார்க் கன்றோ காதல்
தாவகம் புகுந்து பெற்ற தாதைசொற் காக்க வந்த
சேவக னுழையே வாழுஞ் சிறுவனோ சிறுமை கொள்
[வேன்.

(மனங்கலங்கி) சீ! இதென்ன! நான் இராமன்தன் தம்பியான இலக்குமண னன்றோ? பூவுலகத்திற்கு அணிகல மானாலென்ன? அல்லது இமையவர்வாழ் உலகத்திற்கு அலங்காரமாகவேயிருந்தாலென்ன? கீழ்மையோ ரன்றோ இதனில் ஆசைகொள்வார். தந்தை சொல் நிறைவேற்றக் காட்டிற்கு வந்த ரகுவீரனிடம் வாழ்கின்ற தம்பி இலக்குமணனை யானோ சிற்றின் பத்தி லாசைகொள்வேன்.

[அழகிய உருவத்துடன் சூர்ப்பநகை வருகிறாள்]

சூர்ப்பநகை:—ஆ! இவரும் அவர்தான் (வெட்கப்படுகிறாள்.)

லக்ஷ்:—மாறுபாடு செய்தேனே; ஏனென்றால், முனிவர் பழக்கத்திலிருக்கும் யான் இவளைக் கோபப் பார்வையுடன் நோக்கினும் இவள் வெட்கத்துடன் இன்ப நோக்கால் பார்ப்பதுமன்றி, வண்டுகள் சரிந்து விழும்படி வணங்கவும் செய்கின்றாள்.

சூர்ப்:—(தனக்குள்) இவரும் என்ன சொல்வாரோ தெரியவில்லை. இருக்கட்டும்; இப்படிச் செல்வோம். (வெளிப்படை)—ஐய! இங்கே வரவேண்டும்.

லக்ஷ்:—யோகநிலை பழகுகின்றவர் பெண்களின் உலக வழக்கத்தைக் கவனிக்கவேண்டாமே (நடக்கின்றான்)

சூர்ப்:—(சிறிது நெருங்கி) ஐய! 'அடைக்கல' மென் றடைந்த பெண்களை அலக்ஷியஞ் செய்வது தகுதியன்று

லக்ஷ்:—தக்கதே; உன்னை அலக்ஷியஞ் செய்யவில்லையே; இயற்கையான உரிமையின்றி யான் துன்பப்படுகிற தமையனுடைய ஆளுகையிலன்றோ இப்பொழுதிருக்கின்றேன்.

சூர்ப்:—ஆனால், என்பொருட்டு உன்தமையன் உனக்கிட்ட கட்டளையையும் மறுக்கக்கூடாதன்றோ?

லக்ஷ்:—(கோபத்துடன்) சீ! இப்படி எனக்கு யார் உத்திரவிடுகிறவர்?

சூர்ப்:—கருணை செய்யவேண்டும், அருள்புரிக. தமையனான இராமனே உத்தரவிடுகின்றான்.

லக்ஷ்:—(தனக்குள்) ஆ! இவள் முன்னமே இராமனைக் கண்டவள்போலிருக்கிறாள்; தமையனும் இவளுடன் சிறிதுபொழுது பேசியிருக்கின்றான்போலும்; ஆதலால் இவளைச் சமாதானஞ்செய்வோம்; (வெளிப்படை) அம்ம! தமையன் உத்தரவு செய்ததென்ன?

சூர்ப்:—ஐய! கேட்கவேண்டும்:

லக்ஷ்:—நன்கு கவனிக்கின்றேன்.

சூர்ப்:—என்னுடன் கூடியே நீ, தனக்கு ஊழியஞ் செய்யவேண்டுமென்று இராமன் கட்டளையிடுகின்றான்.

லக்ஷ்:—

உடைக்கெனில் மெதுவில் சீரை
யுறைவிடம் மரத்தின் பாங்கர்
படுத்தற்கோ புற்பா யுண்டி
பாங்கிலாக் கந்த மூலம்
முடிப்பதோ புனல்வார் கற்றை
முயலிடம் விலங்கி னீட்டம்
படுத்தலில் தவச்சீ ரெங்கே
மாறுடை யனங்க னெங்கே!

உடுப்பதற்கோவெனில் கரடுமுரடான மரவுரி; இருப்பதோ மரநிழலில்; படுப்பது தருப்பைப்பாயலில்; உணவோவென்றால் காய்கிழங்குகள்; தலைமுடியோவெனில் நீர் வற்றாத செஞ்சடைக் காடு; இக்காடோவெனில் கொடிய விலங்குகள் மிகுந்த விடம்; ஆதலால் சிறிதும் பொருந்தாத தவச்செய்கை யெங்கே; அத்தவத்திற்குப் பகையான மன்மதனுடைய செய்கை யெங்கே!

சூர்ப்:—இது வெறும் பொய்; அந்த இராமன் மனைவியுடன் கூடவே யிருக்கின்றானே.

லக்ஷ்:—பெண்மணி! இராமனுடைய நிலைமையை உண்மையில் நீ அறியவில்லை.

சூர்ப்:—என்ன! என்ன!

லக்ஷ்:—உண்மையாக, வனவாசங் கழிந்து நாட்டவர்களையும் தாயர் முதலிய சுற்றத்தாரையும் பார்க்கும்வரை ஐயனை இராமன் பிரமசாரி விரதத்தையே மேற்கொண்டிருப்பார்.

சூர்ப்:—எனின், அவள் இங்கு என்ன செய்கின்றாள்.

லக்ஷ்:—நான் செய்வது போலவே......

சூர்ப்:—அவள் எப்படி அவனுக்கு ஊழியஞ் செய்கின்றாளோ அதுபோலவே நானுனக்கு ஊழியஞ் செய்கின்றேனே.

லக்ஷ்:—அழகிய பார்வையுடையவளே! இதற்குமா ஆசைப்படுகின்றாய்; அறிவுடையோர் துன்பத்திற்கிடமாய அடிமைத்தொழிலை வெறுக்கின்றனர்; பேதாய்! நீ அதை விரும்புகின்றாயே; அந்த நினைவை விட்டுவிடு.

சூர்ப்:—நட்பானது நன்மைதீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்குமோ?

லக்ஷ்:—(தனக்குள்) இப்படிச் சொல்கின்ற இவளை எப்படித் தள்ளுவது! ஆகட்டும், வழியிருக்கிறது; (வெளிப்படை) சுந்தரி! இராமன் பர்ணசாலைக்கு வந்தபிறகு நான் உன்னைக் குறிப்பிட்ட இடத்தில் வைத்துப் பார்த்துக்கொள்கின்றேன்.

சூர்ப்:—அப்படியானால் நான் பர்ணசாலையின் பக்கத்திலேயே நினது வரவை எதிர்பார்த்து நிற்பேன்.

லக்ஷ்:—(தனக்குள்) ஆகட்டும்; காலம் நீட்டல் காரியசித்திக்கன்று. (வெளிப்படை) உன் விருப்பம் போலவே!

சூர்ப்:—உன்னுடையஉத்தரவுபோலவே! (போகின்றாள்)

(தொடரும்)

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், போவாவின் பேதமையும், புன் கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷுர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷுர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—

KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்லேன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

தபாலாபீஸ் களவு:—இம்மாதம் 12ந்தேதி இரவு கல்கத்தா ஜெனரல் போஸ்டாபீஸில் களவு நடந்துளதாம். எவ்விதமோ இன்ஷியூர் சாமான்கள் வைக்கப்பட்டுள்ள அறையில் திருடர்கள் புகுந்து அனேக இன்ஷியூரன்ஸ் பார்சல்களைக் களவாடிச் சென்றனராம். இது விஷயமாய்ப் போலீசார் முயன்று விசாரித்து வருகின்றனர் என்றும் இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிகின்றது

***

ஜி. ஐ. பி. ரயில்வே வேலைநிறுத்தம்:—ஜி. ஐ. பி. ரயில்வே வேலைக்காரர்கள், தங்களது குறைகள் கம்பனியாரால் தீர்க்கப்படவில்லை என்று சென்றவார இறுதியில் செய்த வேலைநிறுத்தம் இன்னும் முடிவடையவில்லை. தொழிலாளர்களும் அதிகாரிகளும் பிடிவாதமாகவே யிருப்பதாகத் தெரிகின்றது. இவ்வாரம் ரயில்வே அதிகாரி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:— லபனில் வண்டிகள் ஓடிவருகின்றன. கூட்ஸ் வண்டிகளும் அதிகமாகப் போய்வருகின்றன. இவ்வாரம் 2000 பார்சல்கள் குட்ஸ் மூலம் அனுப்பப்பெற்றன. நாகபுரியிலும் வேலைநிறுத்த நிலையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. ஷோலாப்பூர் டிவிஷனில் அதிகமான சாமான் வண்டிகள் இப்பொழுது ஓடிவருகின்றன.

***

காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம்.—"ஆமதபாத்திலுள்ள காந்திஆச்ரமத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டம் நடைபெறும். அகில இந்தியத் தலைவர்கள் இங்கு வருவார்கள். காந்தியடிகள் இனித் துவக்கவேண்டிய போர் விஷயமாக ஒரு ஏற்பாடு செய்து வருகின்றார். ஆச்ரமவாசிகளையும் வருங்காலச் சத்தியாக்கிரஹப் போருக்குத் தயார்செய்து வருகின்றார். இந்தியா முழுதும் ஒரே சமயத்தில் சத்தியாக்கிரஹ இயக்கம் துவக்குமாயின் கலகம் பலாத்காரச்செயல் முதலியவை ஏற்படுமெனக் கருதிக் காந்திபடிகள் சில குறிப்பிட்ட விடங்களில் இப்போரைத்துவக்குவார். வரிமறுப்பு விஷயமாயும் ஒரு திட்டம் தயார் செய்துள்ளார். முதன்முதல் உப்பு வரியின்மேல் காந்தி அடிகள் கவனத்தைச் செலுத்துவார்" என்று ஆமதாபாத்துச் செய்தி மூலம் தெரிகின்றது.

இந்தியாவின் பொருட்டு அமெரிக்கரின் முயற்சி:—அமெரிக்காவிலுள்ள லிபரல்கட்சித் தலைவர்கள் சேர்ந்து இந்தியாவிற்குப் பொறுப்பாட்சி அளிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டி மனுவொன்றைத் தயாரித்துப் பிரிட்டிஷ் மஹாஜனங்களுக்கு அதை அனுப்பியிருக்கின்றனர். அம்மனுவின் சுருக்கம் வருமாறு:—

"இந்தியர் சுயஆட்சி பெறத்தீர்மானித்துச்சாத்விகப்போர் தொடுக்கத்தயாராகவிருக்கின்றனர். இந்த நெருக்கடியான நிலைமையில் பிரிட்டிஷார் அடக்குமுறையைக் கையாள்வது முறையன்று. இந்திய உள்நாட்டு விஷயத்தில் அமெரிக்க அரசாங்கத்திற்கும், அமெரிக்க ஜனங்களுக்கும் எத்தவிதமான சம்பந்தமுமில்லை என்பது உண்மையே; எனினும் இந்தியா பலாத்காரமற்ற வழியைப் பின்பற்றி உலகமஹாஜனங்களைத் தங்களுக்குத் துணை புரியமாறு கேட்கையில், அமெரிக்கர் சும்மாவிருக்க முடியாது. உலக சமாதானத்தில் இங்கிலாந்து நாட்டமுடைய தென்பதற்கு இந்தியவிஷயமாய்ச் சமாதான ஏற்பாட்டை பிரிட்டிஷார் செய்தல் வேண்டும்.

189092

***

பஸ்விபத்து:—கோயமுத்தூரிலிருந்து பாலக்காடு செல்லும் பஸ்ஸும், பாலக்காட்டிலிருந்து கோயமுத்தூர் செல்லும் பஸ்ஸும், கோயமுத்தூருக்கு அருகிலுள்ள மதுக்கரை என்ற ஊரில் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. இரண்டு பஸ்களும் 40மைல்வேகத்தில் சென்று கொண்டிருந்தனவென்று சொல்லப்படுகின்றது. இரண்டு பஸ்களிலும் ஜனங்கள் நிறைந்திருந்தனர். ஒரு கண்டக்டர் தலை இரண்டு துண்டாய்ப் போயது. ஒருவன்தலை நசுங்கிப்போயிருந்தது. இரண்டு பிரேதங்கள் உருக்குலைந்து காணப்பட்டன. நால்வர் இறந்து கிடந்தனர். 7 பேருக்கு அபாயகரமான காயம். அவர்களில் நால்வர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுகையில் இறந்தனர். மற்றவர்களும் பிழைப்பர் என்பதற்கில்லை. ஒரு டிரைவருக்குக் கண்ணில் பலமான காயம். மற்றவனுக்குக் கை போய்விட்டது. பஸ்கள் சிதறுண்டு போயின. பலர்வயித்தியசாலையில் சிகிச்சையில் இருக்கின்றனர். என்று கோயமுத்தூர்ச்செய்தி மூலம் தெரிகின்றது.

"ப்ரேமவல்லி"

அல்லது

பயங்கர ரகசியம்

By

Mrs. D. N. Sundaram.

இது ஓர் சிறந்த துப்பறியும் நாவல்.

துப்பறியும் விஷயத்தில் மிகவும் சிறந்ததாகித் துப்பறிபவள் மிக்க புத்தி சாதுர்யத்துடன் பல வேலைகள் செய்துவருவது, மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. இது படிக்கப்படிக்க மிக்க இன்பத்தைத் தரும். இன்னும் என்னவருமோ எப்படியாகுமோ வென்று படிப்போரின் மனத்தைக் கவரும் தன்மையுடையது.

விலை ரூபா **0 14 0**

இப்புத்தகம் கிடைக்கும் இடம்.

Mrs. D. N. SUNADARAM.

16. வடகூர் செல்வவிநயகர்கோவில் தெரு,
மைலாப்பூர், சென்னை.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள் தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப்பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளிபநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்கள் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது.

உள்நாடு சந்தா	ரூபா	**2 0 0**
வெளிநாடு ,,	,,	**2 8 0**
தனிப்பிரதி விலை	அணு	**0 4 0**

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

KALANILAYAM. REG. NO. M. 2324.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF. BENOY KUMAR SARKAR, M.A. **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT :

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

HINDU PAD-PADASHAHI :

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR. M.A., Ph. D., Dacca. **Rs. 3**

ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA

by V. V OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V V. Oak has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION

by MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

DIALOGUE DIVINE AND DRAMATIC

by GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்ரும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு - ஆ நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினுவிடை கா.ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி ஜயராம ஐயர் ... 0 5 0
11. வில்விக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிரமணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே.பி சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்-S. சீனிவாசையர்... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **The New Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II " **As. 4.**
23. Book III " **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6.**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

(V. P. Charges, Extra of the Prices.)

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)